Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 தை 02 15-01-2005 சனிக்கிழமை ஓசை -332



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11140) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## கனேடிய அரசின் நிதியுதவி சரி சமமாக பகிர்ந்தளிக்கப்படும்!

### - கனேடியத்தூதுவர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கனடா அரசினால் வழங்கப்பட்டுள்ள உதவியினை சிறிலங்காவிற்கும், வடக்கு கிழக்கிற்கும் சமபங்காக வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதாக கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஜிம் அரியேனஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பகல் கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியதன் பின் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கனேடிய இராணுவம் அம்பாறையில் பணிகளில் ஈடுபட்டிருப்பது குறித்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் கலந்துரையாடிய பொழுது கனேடிய இராணுவம் அம்பாறையில் சிறந்த முறையில் செயற்பட்டு வருவது குறித்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்திருந்தார் எனத் தெரிவித்த அவர்;

தொடர்ந்து செய்தியாளர்களின்

(12ஆம் பக்கம் பார்க்க)



# காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களை அமெ. புனரமைத்துக் கொடுக்க இணக்கம்

## - வெவ்வேறு முகாங்களிலிருந்து -

## இரு ராணுவச்சிப்பாயின் சடலங்கள் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைப்பு

திடீரென இறந்துவிட்டதாகத் தெரிவித்து படையினர் இருவரது சடலங்கள் நேற்றுமுன்தினம் யாழ். போதனாவைத்தியசாலையின் பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் இராணுவ முகாமைச் சேர்ந்தவரான படைச்சிப்பாயான பிளடிடின்னா (வயது-26) மற்றும் வேலணை கடற்படைகளத்தைச்சேர்ந்த ஏ.அர். வீரபண்டார (வயது-25) ஆகிய கடற்படைச்சிப்பாய் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

வெவ்வேறான இராணுவத் தளங்களில் உயிரிழந்திருந்த இவர்களது சடலங்கள் மானிப்பாய் மற்றும் ஊர்காவற்துறை பொலிசாரால் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையின (12ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. பொறியியலாளர் குழு பார்வையிட்டது

**சுனாமி கடற்கொந்தளிப்பினால் பெரும் சேதங்களிற்குள்ளாகியுள்ளதும், தற்போது படையினரது பாவனையிலுள்ளதுமான காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை இறங்குதுறைகளை உடன் புனரமைத்து வழங்க அமெரிக்க அரசு முன்வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. பாதிக்கப்பட்ட இவ்விரு இறங்குதுறைகளையும் பார்வையிட அமெரிக்க இராணுவ பொறியியல் பிரிவின் உயர் அதிகாரிகள் குழுவொன்று கடந்த வியாழக்கிழமை குடாநாட்டிற்கு விஜயம் செய்திருந்ததாகவும் தெரியவருகிறது.**

தமது நாட்டு விசேட கடற் படைக் கப்பலில், இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகுகள் பாதுகாப்பு வழங்க இக்குழுவினர் காங்கேசன்துறை வந்திருந்ததாகவும், தொடர்புடைய வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இவ் இராணுவ பொறியியல் நிபுணர் குழுவும், யாழ்.மாவட்ட படைத்தலைமையினைச் சேர்ந்த சில அதிகாரிகளும் பலாலியில் இருந்து வாகனத் தொடரணி மூலம் பருத்தித்துறை இறங்குதுறையினை நேரடியாக வந்து பார்வையிட்டிருந்ததாக, அங்கு பணியாற்றும் துறைமுக அதிகார சபையின் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

ஆயினும் இந்நிபுணர்கள் குழு எந்த நாட்டினைச் சேர்ந்தவர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## த.பு.கழகத்திற்கு கனேடிய அமைச்சர் விஜயம் பணிப்பாளரைச் சந்தித்துப் பேச்சு

கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைச் செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜிம் கரிஜியானிஸ் அவர்கள், அங்கு அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி மற்றும் திட்டமிடல் பொறுப்பாளர் திரு.லோறன்ஸ கிறிஸ்ரி உட்பட பலரைச் சந்தித்து கலந்துரையாடினார். சுனாமி அனர்த்தத்தின் பாதிப்புக்கள் குறித்த விவரணச் சித்திரப் படங்களுடன் வடக்கு கிழக்குப்

(12ஆம் பக்கம் பார்க்க)



## தாழ் அமுக்க நிலை தொடர்ந்து நீடிப்பு

வங்காள விரிகுடாவின் தென்புறத்தில் ஏற்பட்டுள்ள தாழ் அமுக்கத்தில் தொடர்ந்தும் மாற்றங்கள் ஏற்படவில்லை என காலநிலை அவதான மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்துரைத்த காலநிலை அவதான மைய அதிகாரி அனுஸா வர்ணசூரிய இந்த தாழ் அமுக்கம் காரணமாக யாழ்ப்பாணம் மற்றும் ஹம்பாந்தோட்டை பகுதியின் கடற்றொழிலாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

இந்த பகுதிகளில் காற்று வீசும் அத்துடன் ஆழ்கடல் பகுதியில் மழை பெய்யும் ஏதுநிலையும் காணப்படுகிறது. நேற்றுக் காலை 650 கடல் மைல்களுக்கு அப்பால் நிலைகொண்டிருந்த தாழ் அமுக்கம் நேற்று மாலை 4 மணி அளவில் அம்பாந்தோட்டை மற்றும் கிழக்கின் கடல் பகுதியில் இருந்து 600 கடல் மைல் தூரத்தில் நிலை கொண்டுள்ளது இது தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுவதால் காலநிலை அவதான மையம் உரிய தகவல்களை தருவதற்கு முயற்சிக்கிறது. இந்த நிலையில் ஊவா பிராந்தியத்தில் மழை பெய்யக்கூடும் அதேநேரம் யாழ்ப்பாணம் தொடக்கம் அம்பாந்தோட்டை (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இல் கடல் அள்ளிச் சென்ற ஆயுதங்களைத் தேடும் படையினர்

யாழில்.சுனாமி கடற்கொந்தளிப்பின் போது மூழ்கிப்போன தமது படைத்தளங்களிலிருந்து காணாமல் போன ஆயுத்தளபாடங்களைத் தேடி படைத்தரப்பு முழு வீச்சில் தேடுதல் வேட்டையினை மேற்கொண்டுள்ளது. வடமராட்சி கிழக்கின் மணற்காடு மற்றும் குடத்தனை கரையோரக் கிராமப் பகுதிகளிலேயே நூற்றுக்கணக்கான படையினர் இத்தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கின் கரையோர கிராமமான மணற்காட்டின் பொற்பதி பிரதேசத்திலும், குடத்தனையின் கரைப்பகுதியிலும், இராணுவக் கடற்படைத்தளங்கள் பெரிய அளவில் நிறுவப்பட்டிருந்தது. அங்கு ஆயிரக்கணக்கான படையினரும் கடமையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் 10436 பேர் உயிரிழப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தால் பத்தாயிரத்தி நாநூற்றி முப்பத்தாறு பேர் உயிரிழந்துள்ளனர். முப்பத்தெண்ணாயிரத்து அறுநூற்றி எண்பத்தி நான்கு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் புள்ளிவிபரப்படியே இந்த இறப்புக்களுக்கும் பாதிப்புக்குள்ளான குடும்ப விபரங்களும் பெறப்பட்டுள்ளன.

மேற்படி புள்ளிவிபரங்களின் படி அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் மொத்தம் 710 பேர் உயிரிழந்துள்ளனர். ஐயாயிரத்து எண்பத்தைந்து குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இதனால் பதினையாயிரத்து எண்நூற்றி ஐம்பத்தாறு பேர் அகதியாகியுள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### சிங்கள மொழிவகுப்பு புதிய பிரிவு ஆரம்பம் 15. 01.2005

வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் 4-5.30 மணிவரை நடைபெறும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். விபரங்களுக்கு:-பி.எஸ்.ரி. தொழில்நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (5551)

### காணி விற்பனைக்குண்டு

கரடிப்போக்குச்சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் கணேசபுரத்தில் அமைந்துள்ள அரை ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டியது சுடர் நிலவு பல்பொருள்வாணிபம் ஆனந்தபுரம், கிளிநொச்சி. தகவல் க.மார்க்கண்டு. (5544)

### மரக்கன்றுகள் விற்பனைக்கு!

நல்லின சவுக்கு மரக்கன்று விற்பனைக்குண்டு. (கன்றின் விலை15/=) தொடர்புகளுக்கு:- முகாமையாளர், நாற்று உற்பத்தி மையம், கனகாம்பிகை அம்மன் கோவிலடி, இரணைமடு. (5557)


### - கல்முனை, திருக்கோயில் பிரதேசத்தில் -

# இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களில் பல்வேறு பணிகளில் பெண்போராளிகள்

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை திருக்கோயில் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து மக்கள் தங்கியுள்ள முகாம்களில் விடுதலைப்புலிகளின் பெண்போராளிகள் பல்வேறுபட்ட பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வொரு முகாம்களிலும் மகளிர் குழு அமைக்கப்பட்டுள்ளது. கற்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார், பெண்கள், குழந்தைகளின் நலம்பேணும் பணிகள் இக்குழுக்களின் ஊடாக மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு இங்குள்ள இடம்பெயர்ந்த முகாம்களில் வாழும் மக்களுக்குரிய உணவு, அத்தியாவசியத் தேவைகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் இணைந்து பூர்த்தி செய்து வருகின்றன. அத்துடன் சிறுவர்களை மகிழ்ச்சியூட்டும் விளையாட்டுக்கள் நிகழ்ச்சிகளையும், பெரியோர்களை ஆறுதல்படுத்தும் நிகழ்ச்சிகளையும் விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்.தொழில்நுட்ப மாணவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். முன் நிகழ்வுகள் தற்போது திருக்கோயில் பிரதேசத்தில் இடம் பெற்று வருகின்றது.

## கியூடெக் கொடுப்பனவு

தொண்டர் ஆசிரியர், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 17ஆம் திகதி கரைதுறைப் பற்று புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களிலும் 18 ஆம் திகதி ஒட்டுசுட்டான், துணுக்காய், 19ஆம் திகதி கரைச்சி 20ஆம் திகதி கரைச்சி கண்டாவளை, 25ஆம் திகதி பூநகரி ஆகிய இடங்களில் உரிய நேரத்தில் வழமையான இடங்களில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## தொடர்பு கொள்க

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த 13 கலைப்பிரிவு மாணவியான எ.மேரி யுஸ்ரினா என்பவர் எங்கிருந்தாலும் உடன் தொடர்பு கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய சங்கீத ஆசிரியை கேட்டுள்ளார். (08)

## மன்னார் பொதுவைத்தியசாலைக்கு சட்ட வைத்திய அதிகாரி நியமனம்

மன்னார் பொதுவைத்தியசாலைக்கு 01.01.2005 முதல் முறையாக சட்ட வைத்திய அதிகாரியாக டாக்டர் கே.எஸ்.அசோக்பிரியந்த நியமனம் பெற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மன்னார் பொது வைத்தியசாலையில் திடீர் மரணங்கள் அடிகாயங்கள் மதுபோதை தொடர்பான குற்றவியல் தொடர்பான அறிக்கைகள் யாவும் இவரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (18)

### —முல்லைத்தீவுப் பிரதேசத்தில்—

## சுனாமியால் உயிரிழந்தோரின் புகைப்படங்கள் பார்வைக்கு

முல்லைத்தீவில் இடம்பெற்ற சுனாமி கடற்கொந்தளிப்பு காரணமாக பலியானவர்களின் புகைப்படங்கள் அவசர காலப் பணிமனையில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. தேவையானவர்கள் சென்று பார்வையிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என முல்லை மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (08)

## சுனாமிஅனர்த்தத்தால் அழிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் குறித்து மதிப்பீடு

தொழில் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு அமைவாக 26.12.2004 அன்று இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் அழிக்கப்பட்ட நிறுவனங்கள் சம்பந்தமான மதிப்பீடுகள் மேற்கொள்வதற்கு தொழில் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே தொழில்ஸ்தாபனங்களில் ஏற்பட்ட பின்வரும் பாதிப்புக் களின் விபரங்கள் பெறப்படவுள்ளதாக யாழ். மாவட்ட தொழில் அலுவலகம் அறிவித்துள்ளது. தொழில் வழங்குனர் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், காயங்கள், காணாமல் போனோர் பற்றிய விபரங்கள். தொழில்ஸ்தாபனத்துக்கு ஏற்பட்ட கட்டடங்கள், இயந்திரங்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், தொழில்ஸ்தாபனத்தை மீள ஆரம்பிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை பற்றிய விபரம் ஆகியன இதன்போது திரட்டப்படவுள்ளது.

மேற்கூறப்பட்ட பாதிப்புக்களை எதிர்நோக்கும் தொழில்ஸ்தாபனத்தின் தொழில்வழங்குனர்கள் 25.01.2004 இற்கு முன்பதாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் கட்டடத்தில் உள்ளமாவட்ட தொழில் அலுவலகத்தில் விபரங்களைப் பதிவு செய்யுமாறு உதவி தொழில் ஆணையாளர் கேட்டுள்ளார்.

## பதிவுசெய்க

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து இளைஞர் கழகங்களும் 2005ஆம் ஆண்டுக்கான பதிவினை புனரமைப்புச் செய்வதுடன் புதிதாக அமைக்கப்படவுள்ள இளைஞர் கழகங்களும் நிர்வாகிகளை தெரிவு செய்து எதிர்வரும் 28.01.2005ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யுமாறு முல்லைத்தீவு இளைஞர் சேவை அதிகாரி கேட்டுக்கொள்கின்றார். (08,20)

## மன்னார் மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றி அலுவலகம் திறப்பு

மன்னார் மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தில் அலுவலக திறப்புவிழா கடந்தஞாயிறு காலை 11.00 மணியளவில் மன்னார் பிரதான வீதியில் உள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதற்கு ஒன்றியத்தின் தலைவர் ம.றீகன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் பெயர்ப் பலகையை மாணவர் ஒன்றியத்தின் மாவட்டப் பொறுப்பாளர் வேங்கையன் திரைநீக்கம் செய்து வைத்தார். அலுவலக நாடாவை பொதுச் சங்கத்தின் இணைப்பொறுப்பாளர் ஈழப்பிரியன் அவர்கள் திறந்து வைத்தார். மன்னார் நகர பொறுப்பாளர் வசந்தன் உட்பட வெகுசன அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர், தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலாளர், தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டப் பொறுப்பாளர், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் மரியநாயகம் உட்பட பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (18)

## கிளி.மருத்துவர் சங்கம் நன்றி தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் வன்னிப் பெருநிலப்பரப்பு கடற்கரையோரங்கள் அனைத்திலுமிருந்து காயமடைந்த நோயாளர்களால் நிரம்பி வழிந்த கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனர்த்த காலத்தின்போது இந்நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்க வைத்திய நிபுணர் குழுக்கள் அனுப்பியும் தானும் நேரடியாக வருகைதந்து சிகிச்சையளித்த போதனாவைத்தியசாலைப் பணிப்பாளரும் சத்திரசிகிச்சை நிபுணருமான டாக்டர் எஸ்.இரவிராஜ் மற்றும் சிகிச்சை மேற்கொண்ட ஏனைய வைத்திய நிபுணர்களான டாக்டர் ஜெயரட்ணம் (சத்திரசிகிச்சை நிபுணர்) டாக்டர் உமாபதி (எலும்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர்) டாக்டர் கணேசமூர்த்தி-மயக்க மருந்து வைத்திய நிபுணர், டாக்டர் திருமதி. நாகேந்திரன் (பொதுவைத்தியநிபுணர்) ஏனைய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் தாதிய உத்தியோகத்தர்கள் மருத்துவபீட மாணவர்கள் அனைவருக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் கிளிநொச்சி மருத்து சங்கம் தனது தன்நிறைவைத் தெரிவித்துக் கொள்கிறது.

அத்துடன் மேற்படி நெருக்கடி கால கட்டத்தின் போது வவுனியா மற்றும் மன்னார் பொது வைத்திசாலைகளில் இருந்து வருகைதந்த வைத்திய நிபுணர்கள் வைத்திய அதிகாரிகள் தாதிய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றியினை கிளிநொச்சி மருத்துவசங்கம் தெரிவித்துக்கொள்கின்றது. (சோ)

## இங்கிலாந்து தோலியல் நிபுணர் புதுக்குடியிருப்பில் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

இங்கிலாந்திலிருந்து வருகைதந்திருக்கும் தோலியல் நிபுணர் ரவீந்திரன் அவர்களால் தோல் சம்பந்தமான நோய்களிற்கு விசேட சிகிச்சைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி சிகிச்சையானது புதுக்குடியிருப்பு டாக்டர். பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நாளை ஞாயிற்றுக் கிழமையும் மறுநாள் திங்கட் கிழமையும் காலை 08.00 மணி தொடக்கம் மாலை 02.00மணிவரை நடைபெறும்.

இவ்விசேட சிகிச்சையில் பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (கு)

## புதுக்குடியிருப்பு ம.வி மத்திய கல்லூரியாகத் தரமுயர்வு

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் 01.01.05 முதல் மத்திய கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் ந.குருகுலராஜா அவர்கள் தெரிவித்துள்ளார். (08)

## கண்டெடுப்பு

(உடையார்கட்டு)

கள்ளப்பாடு முல்லைத்தீவைச் சேர்ந்த P.அந்தோனிப்பிள்ளை என்பவரது தொழில் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு உடையார்கட்டு வர்த்தக சங்கத் தலைவரிடம் உள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார். (19)

## இராணுவ பௌசர் மோதியது மினிபஸ் சாரதி உட்பட 4 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை நோக்கிவந்த பயணிகள் சிற்றூர்தி ஒன்றுடன் நாகர் கோவில் இராணுவ முகாமில் இருந்து கட்டுப்பாடற்ற வேகத்தில் வந்த தண்ணீர் தாங்கி ரக்வண்டி மோதியதில் நான்குபேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் நடந்த இந்த விபத்தின் போது சிற்றூர்திச் சாரதியான புஷ்பராசா, நடத்துனரான தற்பரன் ஆகியோரும் இருபயணிகளுமே காயங்களுக்குள்ளானவர்களாவர்.

இவ்விபத்துத் தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (28)

## முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் சங்கம் நிறுவுதல்

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் சங்கம் ஒன்றினை நிறுவுதல் தொடர்பான ஆரம்ப நிகழ்வு நாளை காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணியவித்தியா சாலையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் நிர்வாகக் குழு தெரிவு இவ் அமைப்புக்கள் யாப்பு ஒன்றினை வடிவமைக்கவும் சங்கத்தின் எதிர்கால திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடவுள்ளதால் நாடு பூராகவுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சகல துறை பட்டதாரிகளையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஒருங்கிணைப்புக் குழு கேட்டுள்ளது. (08)

## தலையில்லாத ஆணின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் மன்னார் நானாட்டான் பள்ளங்காமம்வயல் நிலத்தில் முருங்கன் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்ட தலையில்லாத ஓர் ஆணில் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின் மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எம். அப்துல்லா அவர்களின் உத்தரவின் பிரகாரம் அவரது சடலம் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் பொது மயானத்தில் மன்னார் கிராம அலுவலகர் இ.ஜே.ஜே. மிராண்டா அவர்களின் முன்னிலையில் அடக்கம் செய்யப்பட்டது. (18)

## 'சுனாமி' யால் பாதிக்கப்பட்டோருக்கு 500 சதுர அடி பரப்பளவில் வீடு

### - அரசாங்கம் கூறுகின்றது

(கொழும்பு)

சுனாமி பேரலையால் இடம் பெயர்ந்த குறைந்த வருமானத்தை உடைய சகலருக்கும் குறைந்த பட்சம் ஐந்நூறு சதுர அடியில் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த சகல குடும்பங்களுக்கும் சொந்தமாக இருந்த காணியின் அளவு மற்றும் வீடுகளின் கட்டமைப்பு ஆகியவற்றிற்கு அமைய நியாயமான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

# காஸாவில் தற்கொலைத் தாக்குதல் ஆறு இஸ்ரேலியர்கள் உடல் சிதறிப்பலி!

## பதில் தாக்குதலில் 3 பலஸ்தீனர்கள் பலி

காஸா எல்லைப்பகுதியில் வன் செயல்கள் நிறுத்தப்பட வேண்டு மென்ற வகையில் புதிய பலஸ்தீன சனாதிபதி மகமுட் அப்பாஸ் வேண்டுகோள் விடுத்த சிலமணி நேரத்திற்குள் வெடிமருந்து நிரப் பப்பட்ட வாகனமொன்றை உப யோகித்து பலஸ்தீன தீவிரவாதி கள் நேற்று நடத்திய தாக்குதலில் 6 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட் டுள்ளார்கள். இஸ்ரேலிய இராணு வத்தினர் நடத் திய பதில் தாக்குத லில் ஆயுதபாணிகளான 3 பலஸ் தீனியர்கள் கொல்லப்பட்டுள் ளனர்.

பலஸ்தீன தீவிரவாதிகள் இது பற்றி தெரிவிக்கையில் தற் கொலைக் குண்டுதாரிகள் தாங்கள அணிந்திருந்த குண்டுகள் பொருத் தப்பட்ட சீருடையை வெடிக்கச் செய்துள்ளார்களென்று தெரிவித் துள்ளனர்.

பலஸ்தீனத் தேர்தலின் பின்னர் நடத்தப்பட்ட மிகமோசமான தாக்கு தல் இதுவாகும். இஸ்ரேலுடன் சமா தான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு வழிவகுக்கும் விதத் தில் மத்திய கிழக்கில் சமாதான பேச்சு வார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கும் விதத்தில் யுத்த நிறுத்தம் இடம் பெற வேண்டுமென மகமுட் அப் பாஸ் வற்புறுத்தியுள்ளார். ஆனால் தாக்குதலை நடத்திய தீவிரவாதி கள் அவரது சொந்த பத்தா இயக் கத்தைச் சேர்ந்த அல்அஸ்ரா பிரி வினர் எனத் தெரிவிக்கப்படுகின் றது. இத்தாக்குதலின் பின் காஸாப் பிரதேசத்திற்கான போக்குவரத்தை இஸ்ரேல் துண்டித்துள்ளதாக அறி வித்துள்ளது.



ஈராக்கில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்காக சுவரொட்டிகளை ஒட்டும் சுனி ஜனநாயக முஸ்லிம் இயக்க உறுப்பினர்கள்.

### சவப்பெட்டிகளுடன் பேரணி

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி புஷ் 2 ஆவது முறையாக 20ஆம் திகதி பதவியேற்கிறார். அவ்வேளை புஷ் எதிர்ப்பாளர்கள் ஆயிரம் சவப்பெட்டிகளுடன் வெள்ளை மாளிகை நோக்கிப் பேரணி நடத்த இருக்கிறார்கள்.

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் எதுவுமில்லை

# சதாமை அகற்றியதால் உலகிற்கு பாதுகாப்பு!

## -ஏ.பி.சி தொலைக்காட்சிக்கு அமெரிக்க சனாதிபதி புஷ் செவ்வி

(வோஷிங்டன்)

**ஈராக்கில் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் எதுவும் இருப்பது கண்டுபிடிக்கப்படவில்லையென்றாலும் அந்த நாட்டின் மீது போர் தொடுத்தது சதாம் ஹுசைன் பதவியில் இருந்து நீக்கப்பட்டது சரியானதே என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் தன்னுடைய செயலை நியாயப்படுத்தி உள்ளார். சதாம் பதவியில் இருந்து அகற்றப் பட்டு விட்டதால் உலகம் பாதுகாப்பாக உள்ளது என்றும் புஷ் கூறி யுள்ளார்.**

ஈராக்கில் பேரழிவை ஏற்படுத் தும் அணு ஆயுதங்கள் உள்ளன என்ற சந்தேகத்தில் ஐ.நா மூலம் நிபுணர்களை அனுப்பி சோதனை நடத்தப்பட்டது. ஆனால் ஈராக்கில் அந்த மாதிரியான ஆயுதங்கள் இருப்பது தெரியவில்லை. இருந்த போதும் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தது சதாம் ஹுசைனை ஆட்சியில் இருந்து அகற்றியதோடு அமெரிக்கா சிறைக் கைதியாகவும் பிடித்து வைத்துள் ளது. மேலும் ஈராக்கை ஆக்கிர மிப்புச் செய்து அந்த நாட்டில் ஏராளமான இராணுவ வீரர்களை குவித்துள்ளது.

ஈராக்கில் பேரழிவை ஏற்படுத் தும் ஆயுதங்கள் எதுவும் இல்லாத நிலையில் அந்த நாட்டை அமெ ரிக்கா ஆக்கிரமிப்புச் செய்திருப்ப தைக் கண்டித்து பல நாடுகள் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை தெரிந்ததே. இந்த நிலையில் ஈராக் மீது போர் தொடுத்து ஆக்கிரமிப்புச் செய்துள்ளதை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ் நியாயப்படுத்தியுள்ளார்.

ஈராக் மீது போர் தொடுத்து சதாம் ஹுசைனைப் பதவியில் இருந்து அகற்றி சிறைப்பிடித் திருப்பதும், இதனால் அமெரிக்கத் துருப்புகள் 1300 பேரை பலி கொடுத்ததும் சரிதான் என்று புஷ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருக்கிறதா என்பதை அறியும் பணியை அமெரிக்கா நிறுத்தியுள் ளது என்று வெள்ளை மாளிகை தெரிவித்தது.

இதனையடுத்து ஜோர்ஜ்புஷ் அளித்த பேட்டி வெளியானது அவரது பே[illegible]யை ஏ.பி.சி தொலைக்கா[illegible] ஒளிபரப்பியது.

ஈராக்கில் பேரழிவை ஏற்ப டுத்தும் ஆயுதங்கள் இருப்பது என்று நினைத்தது மாதிரி பல நாடுகளும் ஐக்கிய நாடுகளும் சபையும் கருதியது. அதனால் புல னாய்வு பிரிவில் என்ன தவறு நடந்துள்ளது என்பதை அறிய நாங்கள் விரும்பினோம். சதாம் மிகவும் மோசமானவர் அவர் ஆட் சியில் இல்லாததால் உலகம் பாது காப்பாக உள்ளது என்று புஷ் கூறினார். எந்தவித பேரழிவு ஆயு தமும் இல்லாத சூழ்நிலையில் ஈராக் மீது போர் தொடுத்தது நியா யமா? என்று நிருபர்கள் நேரடி யாக கேட்டதற்கு முற்றிலும் நியாய மானதே என்று புஷ் பதில் அளித்தார்.

# 200 கி.மீ தொலைவில் அமைந்துள்ள தாய்வானுக்கு கடலூடாக பாலம்!

## சீன அரசு திட்டம்

(பெய்ஜிங்)

தாய்வானுக்கு பாலம் அமைத்து தொடர்புகளைப் பேண சீனா விருப்பம் தெரிவித்துள்ளது. சீனாவிலிருந்து 200 கி.மீ தொலை வில் உள்ள தீவு தாய்வான். 1949ஆம் ஆண்டு நடந்த உள் நாட்டு யுத்தத்திற்குப் பிறகு சீனா வும் தாய்வானும் பிளவுபட்டு தனித் தனி நாடுகளாகிவிட்டன. இருந்த போதிலும் சமீப காலமாக இரு நாடு களுக்கு இடையே வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

தாய்வானுக்கு கடலில் பாலம் அமைத்து சாலைப்போக்குவரத் தை தொடங்கலாம் என்று சீன அமைச்சர் சுன்ஷியான் தெரிவித் திருக்கிறார். 24 ஆயிரத்து 100 கோடி அமெரிக்கடொலர் செல வில் 20 அல்லது 30 ஆண்டுகளில் இந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க லாம் என்றும் அவர் கூறியிருக் கிறார்.

அப்படி ஒரு பாலம் கட்டப் பட்டால் அது உலகத்தின் புதிய அதிசயமாக இருக்கும்.

அமெரிக்காவில் லூசியானா மாநிலத்தில் உள்ள செகண்ட் லேக் சார்ட்ரெய்ன் பாலம்தான் உலகிலேயே மிக நீளமானதாகும். 38.4 கி.மீ.நீளம் உள்ளதாகும். இது 1969ஆம் ஆண்டு கட்டப்பட்டது.



சுனாமி அலைத்தாக்குதலுக்கு முன்னர் பல ஆயிரம் மக்களால் நிரம்பி வழியும் இந்தோனேசியா ஆஷே மாநில கிறிஸ்தவ தேவாலயம் தற்போது சந்தடியற்று கிடப்பதையும், மீட்புப்பணித் தொண்டர் ஒருவர் தனது மதிய உணவை அருந்த தயாராவதையும் காணலாம்.



ஈராக்கின் அல் அஷாத் முகாமை அண்மிக்கும் சுப்பர் ஸ்ராலியன் உலங்குவானூர்தியை தளத்திலிருந்து அவதானிக்கும் அமெரிக்க கடற்படையினர்.

# ஆசியாவில் 1.60 இலட்சம் பேர் சுனாமி ஆட்கொல்லி பேரலைகளால் உயிரிழப்பு!

## – சுமார் 20 ஆயிரம் பேரைக் காணவில்லை

(ஜகார்த்தா)

சுனாமி ஆட்கொல்லி பேரலை களால் ஆசியா முழுவதும் பலி யானவர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 60 ஆயிரமாக உள் ளது.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்தோனேசியாவில் உள்ள சுமாத்திரா தீவுக்கு அருகே கட லுக்கடியில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கத்தின் காரணமாக ஏற் பட்ட சுனாமி கடல் அலையால் இந்தோனேசியா, இலங்கை, இந் தியா, தாய்லாந்து, மலேசியா, மாலைதீவு உள்ளிட்ட ஆசிய நாடு கள் பல பெரிதும் பாதிப்புக்குள் ளாயின. ஒவ்வொரு நாட்டிலும் பல ஆயிரக்கணக்கானோர் பலியானார்கள்.

இதுவரை கிடைத்த தகவலின் படி ஆசியா முழுவதும் சுனாமி யால் பலியானவர்களின் எண் ணிக்கை 1 இலட்சத்து 60 ஆயிர மாக உயர்ந்துள்ளது.

இந்தோனேசியாவில் மட்டும் 1 இலட்சத்து 6 ஆயிரத்து 523 பேர் பலியானதாக அதிகாரபூர்வ மாக அறிவிக்கப்பட்டுள்ளது.

12 ஆயிரத்து 47 பேரை காண வில்லையென்று மதிப்பிடப் பட்டுள்ளது. இலங்கையில் 30 ஆயிரத்து 893 பேர் பலியானதாக நேற்று முன்தினம் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 6 ஆயிரத்து 38 பேரைக் காண வில்லையென்றும் அறிவிக் கப்பட்டுள்ளது. தாய்லாந்தில் 5 ஆயிரத்து 313 பேர் பலியாகி யுள்ளனர். 3 ஆயிரத்து 254 பேரைக் காணவில்லை. இவர்க ளில் ஆயிரத்து 63 பேர் வெளி நாட்டவர்கள் ஆவர்.

மியான்மர் நாட்டில் 59 பேர் பலியானார்கள். 3 ஆயிரத்து 200 பேர் வீடுகளை இழந்துள்ளனர். மலேசியாவில் 68 பேர் பலியா கியுள்ளனர். இவர்களில் பெரும் பாலோர் பிலாங்கு என்ற இடத் தில் பலியானவர்கள். வங்காள தேசத்தில் 2 பேர் பலியாகியுள் ளனர். ஆபிரிக்க நாடுகள் சில வற்றிலும் சுனாமி தாக்கியது. அங்கு சோமாலியாவில் 298 பேரும், தான்சானியாவில் 10 பேரும் பலியானார்கள்.

# பூகம்பப் பேரலைகள் தொடர்பாக முன்கூட்டியே அறிவிக்க இணக்கம்

(டோக்கியோ)

ஜப்பானும், அமெரிக்காவும் பூகம்பப் பேரலைகள் பற்றி இந்து சமுத்திரக் கரையோர நாடுக ளுக்கு முன் கூட்டியே எச்சரிக்கை செய்ய இணங்கியுள்ளன.

இப் பிராந்தியத்தில் நிலை யான அபாய அறிவிப்புமுறை ஸ்தாபிக்கப்படும்வரை சம்பந்தப் பட்ட நாடுகளுக்கு எச்சரிக்கை அறிவிப்புக்களை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்துள்ளன.

தற்போது அபாய மையமாகக் கொண்டு இயங்கும் பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையத்தின் தகடுகளைக்கொண்டு எச்சரிக்கை அறிவித்தல்கள் மேற்கொள்ளப் படவிருப்பதாக ஜப்பானிய ஊட கம் ஒன்று அறிவித்துள்ளது. நிலையான அமைப்பை ஸ்தாபிக்கும் முயற்சிகள் பற்றி அடுத்தவாரம் ஐக்கிய நாடுகள் மாநாட் டில் பேசப்படும் எனத் தெரி விக்கப்படுகிறது.

# சுனாமியால் அழிந்துள்ள சமாசத்தை கட்டியெழுப்ப உதவக் கோரி அறிக்கை

(அலுவலக செய்தியாளர்)

**சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு முற்று முழுதாக செயலிழந்து போயுள்ள முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தை மீண்டும் கட்டியெழுப்ப உதவுமாறு அச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

அது தொடர்பாக அச் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில்;

சமாசமானது 1990 ஆம் ஆண்டு கடற்றொழில் சங்கமாக இருந்துசெயற்பட்டு வந்த காலப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாகத் தனது சொத்துக்கள் அனைத்தையும் இழந்த நிலையில் இடம்பெயர்ந்து செயற்பட முடியாத காரணத்தினால் முற்று முழுதாக செயலிழந்து காணப்பட்டது. மீண்டும் கடற்றொழில் அங்கத்தவர்களின் அயராத முயற்சியின் பயனாக 21 சங்கங்கள் புனரமைக்கப்பட்டு, அதனை மேம்படுத்தும் நோக்கில் இவற்றிற்கு ஒரு தாய்ச் சங்கமாக 1993 ஆம் ஆண்டு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமாக உருவாக்கப்பட்டது.

இது இயங்கத் தொடங்கியது தொடக்கம் சுனாமி கடல் அனர்த்தத்தினைச் சந்திக்கும் வரை படிப்படியாக வளர்ச்சியினைக் கண்டு வந்தது. இக்காலப் பகுதியில் கடற்றொழிலாளர்களின் குடும்பங்களின் நன்மை கருதி பல நுகர்ச்சிக் கிளைகளினையும், எரிபொருள் நிலையம் என்பனவற்றையும் அங்கத்தவர்களிற்காகவே அமைத்துச் செயற்பட்டு வந்தது. பின் 1996 ஆம் ஆண்டு முல்லை நகரம் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டதன் பின் அதன் நகர வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக ஆட்பணித்துச் செயற்பட்டு வந்தது. முல்லை நகர வளர்ச்சிக்காக வைத்தியசாலை, பாடசாலை மற்றும் ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்களினையும் முல்லை நகரில் மீள இயங்கச் செய்ய அயராது உழைத்தது. அதே காலப் பகுதியில் கடற்றொழிலாளர்களின் குடும்பங்களின் உயர்ச்சிக்காக மேலும் பல நுகர்ச்சிக் கிளைகள், எரிபொருள் நிலையம் கடற்றொழில் உபகரண வாணிபம், கருவாடு பதனிடுவதற்காக உப்பு அரைக்கும் ஆலை அத்துடன் அரிசியாலை, கடலுணவு கொள்வனவு மையம் என்பவற்றினை ஆரம்பித்து குறைந்த இலாபம் வைத்துச் சேவை செய்து வந்தது. அங்கத்தவர்களின் கடலுணவுகளினை தென்பகுதிக்கு கொண்டு சென்று விற்பனவு செய்வதற்காக சமாசத்தின் மூன்று பாரஊர்திகளினையும் பயன் படுத்தி வந்தது. இந்நடவடிக்கைகள் மூலம் சமாசமானது பரிணாம வளர்ச்சி கண்டது. இதனால் அங்கத்தவர்களும் அங்கத்தவ சங்கங்களும் பெரும் பயனடைந்து வந்தன. அதே வேளை கடற்றொழிலாளர்களுக்கும் விதவைகளிற்கும் சுய தொழில் கடன் வழங்குவதற் காக கடற்றொழில் வங்கியை ஆரம்பித்து குறைந்த வட்டி வீதத்தில் தனது திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. அதேவேளை அங்கத்தவர்களின் கடலுணவுகளைப் பாதுகாப்பதற்காக கொழும்பில் இருந்து பனிக்கட்டிகளினை கொள்வனவு செய்து அங்கத்தவர்களிற்கு வழங்கி வந்தது. யு.என்.டி.பி. நிறுவனம் மூலம் அங்கத்தவர்களிற்கு கடன் அடிப்படையில் வெளியிணைப்பு இயந்திரங்கள், படகுகள், வலைகள் என்பனவற்றை வழங்கி வந்தது. எமது எல்லைப் பரப்பிற்குட்பட்ட கரையோரப் பாடசாலைகள், வைத்தியசாலைகளில் பணிபுரியும் தொண்டர்களிற்கு வேதனம் வழங்கி வந்தது. அத்துடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மின் வழங்கல் சேவையும், மாலை நேரப் பாடசாலைகளினை நடாத்துவதற்கு உதவியும் செய்து வந்தோம். கிராமங்கள் தோறும் கடற்றொழிலாளர்களிற்காக கடற்றொழில் ஓய்வு மண்டபங்களினையும் அமைத்துக் கொடுத்தது. அத்துடன் முல்லை நகர வளர்ச்சிக்காக முல்லை நகரப்புனரமைப்புக்குழு என்ற நிறுவனத்தினையும் இயக்கிவந்தது.

இவ்வாறு தனது செயற்பாட்டினை மேற்கொண்டு வந்த வேளையில் கடந்த 26 ஆம் திகதி அன்று ஏற்பட்ட சுனாமி அழிவினால் முற்று முழுதாக எமது சமாசம் அழிக்கப்பட்டு விட்டது. மீள சமாசத்தின் வேலைத்திட்டங்களினை ஆரம்பிக்கவும், பணிபுரியும் பணியாளர்களிற்கு வேதனம் வழங்க முடியாத நிலையில் உள்ளதாலும் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்களின் நன்மை கருதியும் எமது சமாசத்தின் வளர்ச்சி கருதியும் எல்லா நிறுவனங்களிடமிருந்தும் ஏனையோரிடமிருந்தும் உதவி கோரி நிற்கின்றோம்.

உதவி புரிவோருக்கான எமது கணக்கிலக்கம்:

நடைமுறைக்கணக்கு இலக்கம் 607 மக்கள் வங்கி,
முல்லைத்தீவு. (லோ,தீ)

# முல்லை.நகர்ப்பகுதியில் மீட்புப்பணி தொடர்கிறது

சுனாமி கடல் அனர்த்தத்தால் பெரும் பாதிப்புக்குள்ளான முல்லை நகரில் சடலங்கள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் இடங்களில் மீட்பு நடவடிக்கை தொடர்ந்து வருகிறது. இதன்படி நேற்றுமுன்தினம் நடைபெற்ற மீட்பு நடவடிக்கையின் போது முல்லைத்தீவு இறால் குளத்தில் பெண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டு இனங்காணப்படாத நிலையில் மீட்புப் பணிப் போராளிகளாலும், முல்லை காவல்துறையினராலும் எரியூட்டப்பட்டுள்ளது. (லோ,தீ)


### - தற்காலிக கொட்டகைகள் அமைக்க -

# முல்லை மாவட்ட செயலணிக்குழுவால் செயற்பாட்டுக்குழு அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் வாழும் மக்களுக்கு தற்காலிக கொட்டகை அமைத்து குடியமர்த்துவதற்காக முல்லை மாவட்ட செயலணிக்குழுவினரால் நான்கு பேர் கொண்ட செயற்பாட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

செயலணிக்குழுவைச் சேர்ந்தவர்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்தவர்களையும் மற்றும் ஏனைய செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளவர்களையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ள இச்செயற்குழு மக்களுக்கான தற்காலிகக்கொட்டகைகளை அமைக்கும் நடவடிக்கையிலீடுபட்டுவருகிறது. (லோ)




நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பெண்நோயாளர் விடுதிக்கென தொலைக்காட்சிப் பெட்டியினை, பெண் நோயாளர் விடுதியில் வைத்து நிறுவனத் திட்ட இணைப்பாளர் திலகர் வைத்தியசாலை தாதியர் ம.கிருஸ்ண வாணியிடம் கையளிப்பதனை படத்தில் காணலாம். (படம்: சோதி)

### கேணல் கிட்டு உள்ளிட்ட 10 வேங்கைகளின்

# பன்னிரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வு கிளி. பி.சபை வளாகத்தில் நடத்த ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 12ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதியன்று கிளிநொச்சி பிரதேச சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் அன்றைய தினம் காலை 9. 00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மேற்படி நிகழ்வில் நினைவுரைகள், சிறப்புரைகள் இடம்பெறவுள்ளதுடன் அன்றைய தினம் இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கண்டெடுப்பு

கிழவி தோட்டம் கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை ஸ்ரீகாந்தன் இல.481521777V என்ற இலக்கமுடைய அடையாள அட்டை, மேற்பார்த்து மிஸ்ட எம் அன்ரனியூட் மரக்காரம்பளை வீதி, நெளுக்குளத்தைச் சேர்ந்த மேரியூலியஸ் அன்ரனி யூட் என்பவரது "அருணலு" சிறுவர் சேமிப்பு கணக்குப் புத்தகம், மைதின் அன்ரனியூட் என்பவரது கடவுச் சீட்டு., ஒரு சிறு குறிப்பேடு என்பன கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

# வன்னி புனர்வாழ்வு அமைச்சர் முல்லைத்தீவுக்கு விஜயம்

(அலுவலக செய்தியாளர்)

வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் அனர்த்தத்திற்கு உள்ளான முல்லைத்தீவுப் பகுதிக்குச் சென்று அங்கு இடம்பெற்ற அழிவுகளைப் பார்வையிட்ட பின் சிலவாக்குறுதிகளையும் வழங்கிச் சென்றுள்ளார்

அரசாங்கத் தரப்பிலிருந்து வருகைதந்த முதலாவது அமைச்சரான றிசாட்பதியுதீன் கடந்த புதன் கிழமை வருகைதந்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களையும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவரையும் சந்தித்து நிலைப்பாடுகளை அறிந்து கொண்ட பின் தான் உடனடியாக அங்கே முற்றாகச் சேதமாக்கப்பட்ட கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்குத் தேவையான கனரக வாகனங்களை அனுப்பிவைப்பதாகவும் முல்லைத்தீவுப் பகுதிக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு மின்பிறப்பாக்கியையும் அதற்குரிய எரிபொருட்களையும் தருவதாக உறுதிமொழிகள் வழங்கியுள்ளார்

அத்துடன் முல்லைத்தீவு சமாசத்திற்கு பல கோடி ரூபா இழப்பு ஏற்பட்டிருப்பதாக சமாசத் தலைவர் கூறியதை அடுத்து கடற்றொழில் மேற்கொள்ளக்கூடிய அளவிற்கு உதவிகளை வழங்குவதாகவும் உறுதிமொழிகள் வழங்கிச் சென்றுள்ளார்.

வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரட்ணம் அவர்களின் வேண்டுகோளுக்கமைய அமைச்சர், செயலாளர் மற்றும் அதிகாரிகள் கொண்ட குழுவினர்களுடன் வருகை தந்திருந்தார். (கு,45)



வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடற் புவிநடுக்கத்தால் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கு கொரிய நாட்டு மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பதையும் தற்காலிக கொட்டகைகளை அமைப்பதற்கான முதல் நடவடிக்கையாக பற்றைகள் அகற்றப்படுவதையும் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடிகாரணமாக மக்கள் பிளாஸ்ரிக் விரிப்புக்களால் அமைக்கப்பட்ட கொட்டகைகளில் குடியிருப்பதையும் படத்தில் காணலாம். [படம் லோகீசன், பிரதீபன்]

# குடாநாட்டின்கரையோரப் பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்ப முன்வருக

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**சுனாமி கடற்பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள யாழ் குடா நாட்டின் கரையோரப் பிரதேசங்களை மீளமைப்பதற்கு முன்வருமாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.**

கடந்த 26ஆம் திகதி யாழ் குடா நாட்டைத் தாக்கிய சுனாமி கடற் பேரலை அனர்த்தம் காரணமாக வடமராட்சி, வலிகாமம் தீவகத்தின் சில பிரதேசங்களில் உள்ள கடற் கரையோரக் கிராமங்கள் உருக்குலைந்து போயுள்ளன.

இவ்வாறு அலையின் தாக்கத்தினால் உருக்குலைந்து போன கிராமங்களை மீளமைப்புச் செய்து அப் பகுதியில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காகவே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மீளமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்வருமாறு பாடசாலை மற்றும் பல்கலைக்கழகமாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது (33)

# சுகாதாரப் பிரிவினரின் நடவடிக்கைகளால் அதிருப்தி

வடமராட்சி வடக்கு கடற்கரையோரப் பகுதியில் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தெளிகருவி மூலம் கிருமிநாசினி விசிறும் பணி அப்பகுதி மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

எமது செய்தியாளர் அப்பகுதியில் மீளக் குடியேறி உள்ள வீடொன்றுக்குச் சென்று பார்த்த போது அங்கு இலையான் பெருமளவில் காணப்பட்டது. இது பற்றிக் கேட்டபோது, மருந்து விசிறும் பணி ஒழுங்காகநடைபெறவில்லையென்றும் தங்களது வீட்டுக்கு மருந்து விசிறப் படாததினால் இலையான் தொல்லை அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மற்றும் சுகாதாரப் பகுதியினர் விசிறும் மருந்து சைலோன் மருந்து அல்ல என்றும் அது டெட்டோல் என்றும் தெரிவிக்கப்பட்டது. தங்களது வீட்டுக் கிணற்றுக்கு குளோரின் போடப்பட்டதாகவும் ஆனால் குடிநீர் மாசடைந்தே உள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (45)

# ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது வீடுகளைவிட்டு படையினர் இனியாவது வெளியேறவேண்டும்

## - உசன் பிரதேச மக்கள் வேண்டுகை

(தென்மராட்சி)

இந்த நாட்டிலும் அயல் நாடுகளிலும் சுனாமி கடல் சீற்றத்தால் நடந்து முடிந்துள்ள மனிதப் பேரவலத்தைக் கண்டுள்ள சிறிலங்கா அரசாங்கமும், அதன் படைகளும் எமது குடியிருப்புக்களை ஆக்கிரமித்து நிலைகொண்டு- எமது வாழ்வையே நிலைகுலையச் செய்துள்ளன, இந்நிலையில் மனிதாபிமானத்தோடு நடந்து உடனடியாக மீள்குடியமர எமது வீடுகளை ஒப்படைக்க வேண்டும் என உசன் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாகவே படையினரின் ஆக்கிரமிப்பால் உள்நாட்டில் அகதிகளாய் வாழ்ந்து வரும் எமக்கு, வாழ வழிவகை செய்ய நாதியற்ற சிறிலங்கா அரசாங்கம், சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கா உதவி செய்யப்போகிறது. சிறிலங்கா அரசின் ஏமாற்றும் தந்திரங்களும் அதன் ஆக்கிரமிக்கும் உபாயங்களும் சுனாமிபேரலையுடன் அடித்து வரப்பட்டுள்ள வல்லா திக்க சக்திகளின் பின்னணியில் இன்னும் அதிகரிக்கலாம் என தாங்கள் அஞ்சுவதாகவும், இப்பிரதேசம் முழுவதிலும் உள்ள படைநிலைகளை மீளப் புதுப்பிக்கும் பணியில் படையினர் ஈடுபட்டு வருவதும் பயிற்சி நடவடிக்கைகள் அதிகரித்து இருப்பதும் எமக்கு ஏமாற்றத்தை தந்துள்ளதாகவும் இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (28)

# பாடசாலையைத் துப்புரவு செய்யச் சென்ற மாணவர்கள் 3 மணி நேரம் தடுத்து வைப்பு

(நமது நிருபர்)

பருத்தித்துறை உயர்தரப் பெண்கள் கல்லூரியைத் துப்புரவு செய்யச் சென்ற மாணவர்களை நேற்றுமுன்தினம் காலை படையினர் மூன்று மணி நேரம் அனுமதி வழங்காது தடுத்து வைத்தனர்.

சுனாமி அனர்த்தத்தினால் மாசடைந்த இக் கல்லூரியைத் துப்புரவு செய்வதற்காக மாணவர் குழு சென்றபோது முன் காவலரணில் உள்ள படையினர் அதற்கு அனுமதி வழங்காது மாணவர்களைக் காலை எட்டு மணி முதல் பதினொரு மணி வரை தடுத்து வைத்தனர்.

பின்னர் யாழ் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணாவின் தலையீட்டினையடுத்துப் படையினர் அனுமதித்தனர். உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இக் கல்லூரியைத் துப்புரவு செய்யக் கல்லூரி நிர்வாகம் ஏலவே அனுமதி பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (45,27)

# இரு நூல்கள் வெளியீடு

(நல்லூர்)

சிவத்தம்பி செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80 ஆவது அகவை பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற விழாவையொட்டி இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கலாநிதி மனோன்மணி சண்முகதாசனால் எழுதப்பட்ட "காலம் தந்த கைவிளக்கு" என்ற நூலும் மற்றும் ஜேர்மன் நாட்டில் வசிக்கும் குரும்பசிட்டியைச் சேர்ந்த கலாநிதி வெற்றிமணி மு.சு.சிவகுமாரனால் எழுதப்பட்ட "சிவத்தமிழ்" என்ற நூலுமே அண்மையில் வெளியிட்டுவைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் தெல்லிப்பழை அருள் மிகு துர்க்காதேவி தேவஸ்தான திருமண மண்டபத்தில் இந்நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் அருட்கவி. சீ வினாசித்தம்பியும் வழங்கினார்கள்.

நூல்களுக்கான வெளியீட்டுரையை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உப அதிபர் செஞ் சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஆற்றினார்.

வாழ்த்துரையை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைப் பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் நிகழ்த்தினார்.

" காலம்தந்த கைவிளக்கு" நூலை ஆசிரியர் மனோன்மணி சண்முகதாசும், "சிவத்தமிழ்" நூலை ஆசிரியர் கலாநிதி வெற்றிமணி மு.க.சிவகுமாரும் வெளியிட்டு வைக்க விழாநாயகி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுக் கொண்டார்.

நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும்,முன்னாள் அதிபர் பிரம்மஸ்ரீ சி. சரவணபவான் (சிற்பி)யும் ஆற்றினார்கள்.

சிறப்புப் பிரதிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை , யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்களான க.சிற்றம்பலம், மு.சிவலிங்கராசா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

நன்றி உரையினை கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் நூல் ஆசிரியர்களான கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கலாநிதி வெற்றிமணி மு.சு.சிவகுமாரன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (41)

# நெருப்புக்காய்ச்சல் பரவுகிறது

## சுகாதாரத்தை பேண வலியுறுத்து

(நல்லூர்)

தெல்லிப்பளை, மல்லாகம், கந்தரோடை, உடுவில் பகுதிகளில் நெருப்புக்காய்ச்சல் நோய் பரவி வருவதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற தொடர்மழை காரணமாக இப்பகுதிகளில் உள்ளகுடிநீர்க் கிணறுகளில் நோய்த்தாக்க கிருமிகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களும், பொது அமைப்புக்களும் இந்நோயின் தொற்று பரவாமல் தடுப்பதற்கு வசதியாக கொதித்தாறிய நீரைப்பருகும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

காய்ச்சல் போன்ற நோய் காணப்படுபவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று தம்மை மருத்துவபரிசோதனைக்கு உள்ளாக்கிக்கொள்ளும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேநேரம் இப்பகுதியில் உள்ள குடிநீர்க் கிணறுகளுக்கு குளோரின் இடும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பொது மக்கள் அனைவரும் தமது வீடுகளில் உள்ள கிணறுகளுக்கு குளோரின் இடுவதை உறுதிசெய்துகொள்ள வேண்டும் எனவும் வேண்டப்பட்டுள்ளனர்.

# தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலையில் வாரத்தில் மூன்று நாட்கள் பரிசோதனை

(நல்லூர்)

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் வாரத்திற்கு மூன்று நாட்களுக்கு நோயாளர்களை பரிசோதனை செய்யும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

திங்கள, புதன, வெள்ளி ஆகிய மூன்றுநாட்களும் புற்றுநோய்க்கான பரிசோதனையை வைத்திய நிபுணர் மேற்கொள்ளுகின்றார்.

புற்று நோய் வைத்தியசாலைக்கென வைத்திய நிபுணர் ஜெயக்குமார் என்பவர் நியமனம் பெற்று நோயாளர்களை வாரத்தில் மூன்று நாட்கள் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்தாண்டில் மட்டும் யாழ் குடாநாட்டில் புற்றுநோய்க்கு உரிய சிகிச்சை சீராக மேற்கொள்ளப்படாமையினால் 58பேர் மரணம் அடைந்துள்ள தாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது..

தெல்லிப்பழை பகுதியில் இருந்து புற்றுநோய் வைத்திய சாலைக்கு ஒவ்வொரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை வடபிராந்திய பேருந்து சேவையும் இடம் பெற்றுவருகிறது.

பொதுமக்கள் சரியான முறையில் இந்நோய் காணப்பட்டவர்களும், இந்நோயாக இருக்கலாம் என அறிகுறி காணப்பட்டவர்களும், சந்தேகிப்பவர்களும் வைத்திய சாலைக்குச் சென்று சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டப் பட்டுள்ளனர். (41)

# வடக்கு-கிழக்கில் பாடசாலைகளுக்கு 500 மில். ரூபாய்க்கு மேல் இழப்பு

சுனாமி அலைத்தாக்கத்தினால் தமிழர் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளே பாரியளவில் பாதிப்புகளுக்குள்ளானதாக கல்வி அமைச்சின் புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது

மொத்த இழப்பின் 70 சதவீதமானது. தமிழர் பிரதேசத்திலேயே ஏற்பட்டுள்ளதுடன் இவ் இழப்பு 500 மில்லியன் ரூபாய்களுக்கும் மேலானது என்றும் இலங்கையின் கல்வி அமைச்சு கணிப்பீடு செய்துள்ளது.

இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் முற்றாகச் சேதமடைந்த 59 பாடசாலைகளில், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மட்டும் 41 பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இது மொத்த தொகையின் 70 சதவீதமானதாகும். இது தவிர, சில பகுதிகள் மட்டும் சேதமடைந்த 104 பாடசாலைகளில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் 73 பாடசாலைகள் உள்ளன. இதுவும் மொத்தத் தொகையில் 70 சதவீதமானதாகவுள்ளது.

அம்பாறையில் மட்டும் 14 பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்திருப்பதுடன், 24 பாடசாலைகளின் சில பகுதிகளும் சேதமடைந்துள்ளன. இது போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 15 பாடசாலைகள் முற்றாக சேதமடைந்திருப்பதுடன், 18 பாடசாலைகளின் சில பகுதிகளும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மாணவர்களைக் கருத்தில் எடுப்பின், மொத்தமாக பாதிக்கப்பட்ட 77,161 மாணவர்களில் 40,000 க்கும் மேலானவர்கள் தமிழர் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் கிட்டத்தட்ட 18,000 வரையிலான மாணவர்கள் அம்பாறை மாவட்டத்தினையும், 11,514 மாணவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தினையும் சேர்ந்தவர்கள்.

கல்வி அமைச்சின் கணிப்பீட்டின் படி,தமிழர் பிரதேசங்களான வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள மொத்த இழப்பு மட்டும் 500 மில்லியன் ரூபாய்களுக்கும் மேல்வரும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

## - சுனாமி அனர்த்தத்தை புறம்தள்ளி -

# குடாநாட்டில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தும் முயற்சிகளுக்கு கடும் கண்டனம்

( நல்லூர் )

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும்முயற்சியிலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை துப்புரவு செய்யும் நடவடிக்கையிலும் இளைஞர்கள் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் வேளையில் யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டு உத்தியோகத்தர்கள் சிலர் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தும் முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக இளைஞர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள்.

கடந்த வாரம் முதல் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகள் கடந்த சனி, ஞாயிறு மற்றும் நாட்களிலும் இடம் பெற்று வருகின்றது. இந்நடவடிக்கை காரணமாக இப்பகுதி இளைஞர்கள் சுனாமி கடல் அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (41)

# தேனின் மருத்துவக் குணங்கள்

தேன் ஒரு மிகச் சிறந்த இயற்கை ஔடதம். இது பல்லாயிரக் கணக் கான மலர்களிலிருந்து சேர்த்து எடுக் கப்படுவதால் பல தாதுப் பொருட் களும் விட்டமின்களும் இதில் கலக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு வித அமிலம் இருப்பதால் அது பக்டீரி யாக்களை எளிதில் அழித்து விடு கிறது. இதனாலேயே தேன் நீண்ட காலத்திற்குப் பழுதடையாமல் இருக் கிறது. தேன் எல்லாவித கார்போ ஹைட்ரேட்டுகளை விடச் சீக்கிரத்தில் உடலில் உள்ள அணுக்களுக்குச் சக்தி யை ஊட்ட வல்லது.

தேன் தேனீக்களால் முன்பே சேகரிக்கப்பட்ட பொருளாதலால் இலகுவில் இரத்தத்துடன் கலந்து சக்தியைத் தருகிறது. உடலின் வெப்பத்தை ஒரு சீராக வைத்திருக் கிறது. வேலை செய்யும் திறனை அதிகரிக்கச் செய்வதுடன் வேலைப் பளுவினால் ஏற்படும் களைப்பையும் போக்குகிறது. காற்றிலுள்ள ஈரத்தை எளிதில் உறிஞ்சும் தன்மை இதற் குண்டு. தேன் உண்டு வந்தால் ஆயுள் நீடிக்கும் சிறுநீர்க்கோளாறுகளுக்கும் விரை அழற்சியால் ஏற்படும் துன்பத் திற்குங்கூட தேனை அருந்திப் பலன் காணலாம். அபூர்வமான ஞாபக சக்தியை ஏற்படுத்தவல்லது. இரத்தச் சோகை வியாதிக்கும் இது சிறந்தது.

நாட்பட்ட ஆறாத ரணங்களில் ரத்தமும் சீழும் வெளிப்பட்டாலும் கூட தேனைத் தடவி வந்தால் கண்ணுக்குத் தெரியாத பக்டீரியாக்களை உள்ளே செல்ல விடாமல் தடுத்துச் சீக்கிரத்தில் ஆற்றிவிடும். வெட்டுக்காயங்களில் தேனைத் தடவி விட்டால் மறுநாளே குணம் காணலாம். தேனுடன் சேர்க்கப்படும் பொருள்களுக் கேற்ப அதன் மருத்துவ குணமும் மாறுபடு கிறது.

உதாரணமாக எலுமிச்சம் பழச்சாறு டன் தேன் கலந்து தினமும் உண்டு வந்தால் பருமனாக உள்ளவர்களின் பருமனும் எடையும் குறையும். பாலுடன் தேன் கலந்து உண்டு வந்தால் உடல் குன்றி இளைத்துக் காணப்படும் குழந்தைகள் விரைவில் நலம் அடைவார்கள் வயோதிபர்கள், நோய்வாய்ப் பட்டு எழுந்தவர்களுக்கும் இது நல்ல பலன் தரும்.


மிளகுத் தூளுடன் தேன் கலந்து சிறிது சூட்டுடன் வெறும் வயிற்றில் உண்டால் எந்தவகையான இருமலானாலும் குணம் அடைந்துவிடும். இஞ்சிச்சாறு துளசிச்சா றுடன் தேனும் சமஅளவு கலந்து தினமும் மூன்று வேளை அருந்தி வர ஒரு வாரத்தில் மலேரியா குணமாகும். பத்துச் சொட்டுத் துளசிச்சாறுடன் இருபது சொட்டு தேனைச் சேர்த்து காலையிலும் மாலையிலும் உட்கொண்டால் இருதய செயற்பாடு வலிமைபெறும். இலேசான இருதயக் கோளாறுகளும் அகலும்.

இஞ்சியைக் சீற்றுக்களாக வெட்டித் தேனில் ஊறப் போட்டு உண்டு வந்தால் வாயுத் தொல்லை அகலும், உணவு இலகுவில் ஜீரணமாகும், உடல் வலிமை பெற்று வாழலாம். கிசுமுசுப் பழத்தை நீரில் வேகவைத்து தேன் கலந்து குடிக்க கொழுப்பு நீங்கி இரத்தக் கொதிப்பு அடங்கும். இஞ்சி,வெள்ளைப்பூடு தேனுடன் கலந்து வாந்தி, பித்த மயக்கம், குமட்டல் வரும் போது உண்டால் சுகம் வரும். தேள் கொட்டிய இடத்தில் தேன் பூசினால் கடுகடுப்பு நீங்கும் வாயில் ஏற்படும் நோய்க ளான வாய்ப்புண், வரட்சி, வெடிப்பு இவைகளுக்குத் தேனை வாயில் வைத்திருந்து கொப்பளிக்க அவை குணமாகும். பல் வலிக்கும் தேன் சிறந்த மருந்தாகும். கண்வியாதிகளுக்கும் தேனை மை போடுவது போல் தீட்டினால் குணம் காணலாம். இரத்தப் போக்கைக் கட்டுப் படுத்துவதற்கு இது பயன்படுகிறது. இரவில் தூக்கம் வராமல் சிரமப்படுபவர்கள் படுக்கைக்குப் போகுமுன் எலுமிச்சம் சாறில் தேன் கலந்து அருந்தி விட்டுப்படுத்தால் ஆழ்ந்த தூக்கம் உடனே வந்துவிடும். சோர்வு ஏற்படும் நேரங்களில் காப்பிக்குப் பதிலாக வெந்நீரில் தேன் கலந்து அருந்தி னால் மூளை சுறுசுறுப்பு அடைந்து உற்சா கம் ஏற்படும். ஏறக்குறைய 500 கிராம் தேனைச் சேகரிக்க அறுபதினாயிரம் மலர் களுக்கு முப்பத்தேழு இலட்சம் தடவைகள் தேனீக்கள் பறந்து செல்ல வேண்டியிருக் கிறதாம்.

# வால் நட்சத்திரத்தில் ஓட்டை போட்டு ஆய்வு செய்ய விண்கலம்

வால் நட்சத்திரத்தில் ஓட்டை போட்டு, அதனுள் என்ன இருக்கிறது என்பதை கண்டுபிடிப்பதற்காக ஒரு விண்கலத்தை அமெரிக்கா விண்ணில் செலுத்தி யுள்ளது.

'டீப் இம்பாக்ட்' எனப்படும் இந்த விண்கலம் நேற்று முன்தினம் விண்ணில் செலுத்தப் பட்டது. 'டெல்டா – 2' ராக்கெட் இந்த விண்கலத்தை எடுத்துச் சென்றது. புளோரிடா மாநிலத்தில் உள்ள கேப்கானவெரால் விமானப் படைத்தளத்தில் இருந்து இந்த ராக்கெட்



பகல் 1 – 47 மணிக்குப் புறப்பட்டது.

6 மாதம் பயணம் செய்து பூமியில் இருந்து 13 கோடியே 20 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ள 'டெம்பெல் –1' என்ற வால் நட்சத்திரத்தை வருகிற ஜீலை மாதம் 4ஆம் திகதி அடை யும்.


# எலிக்குத் தெரியும் 2 மொழிகள்?

(வோஷிங்டன்)

மனிதர்கள், குரங்குகளைப் போலவே எலிகளுக்கும் இரு வேறு மொழிகளை அடையாளம் காணும் திறன் இருக்கிறது என்று ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த நரம்பியல் துறை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அவர்கள் ஆய்வு செய்த எலிகள் ஜப்பானிய மொழியையும் டச்சு மொழியையும் கேட்டு இவ்விரண்டும் வேறு வேறு என்பதைப் புரிந்து கொள்கின்றனவாம். (எலிகளின் கீசு கீசு என்ன மொழி என்று நமக்குத்தான் புரியவில்லை) அதே சமயம் இதை வைத்து எலிகள் இரு மொழி வல்லுநர்கள் என்ற முடிவுக்கு வந்து விட வேண்டாம் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர். தொடர்ந்து கேட்கும் ஓசைகளில் அல்லது மொழிகளில் இரண்டு வெவ்வேறானவை என்பதைப் புரிந்து கொள்ளும் திறன் அவற்றுக்கு இருப்பது மட்டுமே தங்களுக்குத் தெரிந்தது என்று கூறுகின்றனர்.

# பால் வழி அண்டத்தில் மிகப் பெரிய புதிய கோள் கண்டுபிடிப்பு

நாம்வாழும் பூமிபிரபஞ்சத்தில்பால்வழி அண்டத்தில்




உள்ளது. நான்கு அண்டங்களில் பால் வழி அண்டமும் ஒன்று. இந்தப் பால் வழி அண்டத்தில் கோடிக்கணக் கான கோள்கள் உள்ளன. கணக்கில் அடங்கா சூரியக் குடும்பங்கள் உண்டு. இதில் ஒன்றுதான் நாம் வாழும் சூரிய குடும்பம். இந்தப் பால் வழி அண்டத்தில் தற்போது புதிய கோள் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இந்தக் கோள் மூன்று குணங்களை கொண்டதாக விளங்குகிறது. சிவப்பு நிறமாக இருக்கும் இந்தக்கோள் குளிர்ச்சி நிறைந்ததாக உள்ளது. மேலும் பளபளப்பாக ஒளிரும் தன்மையும் கொண்டது.

இந்தக் கோள் 100 கோடி மைல் விட்டம் கொண்டது அல்[illegible] நமது சூரியனை விட 1500 மடங்கு பெரியது. இந்த[illegible]காள் தற்போது சூரியன் இருக்கும் இடத்தில் இருந்தா[illegible]ல் நமது பூமியை மூடிவிடும் அதன் கடைசி முனை வியாழன் கோளுக்கும் சனிக் கிரகத்திற்கும் மத்தியில் இருக்கும். இவ்வளவு பெரிய கோள் பால் வழி அண்டத்தில் இருப்பதை தற்போது விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்காவின் சாண்டியேகோ நகரில் விஞ்ஞானிகள் குழு ஒன்று நடத்திய ஆய்வில் இந்த மிகப் பெரிய கோள் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கோள் பற்றி மேலும் ஆய்வுகள் நடந்து வருகின்றன. படத்தில் லட்சக்கணக்கான நட்சத்திரங் களுக்கு மத்தியில் பிரகாசமாக ஒளிரும் கோள்தான் பால் வழி அண்டத்தின் மிகப்பெரிய கோளாகும்.

# விமானச் சீட்டு வழங்கும் தன்னியக்க இயந்திரம்

இங்கு காணப்படுவது விமான டிக்கட்டுக்களை வழங்கும் தன்னியக்க இயந்திரமாகும். வெளிநாடு செல்லும் ஒருவர் தான் செல்ல வேண்டிய நாடு, செல்லும் காலம் மற்றும் சுயவிபரங்



களை இதன் கணனியில் பதிவு செய்ய வேண்டும். அப்போது கணனித் திரைமூலம் பயணக்கட்டணத்தை அறிவிக்கும். அத்தொகையை அதிலுள்ள பெட்டியுள் இட்டபின்பு உங்கள் கைகளில் டிக்கட் கிடைத்துவிடும். இதனால் தேவையில்லாத அலைச்சல், பணவிரையம், லஞ்சம் போன்றன தடுக்கப் படுகின்றன.




சீனாவில் நடைபெற்ற பனிச்சிற்பக் கண்காட்சியில் ட்ரகன் பனிச் சிற்பம்

# பேசும் வார்த்தைகளைப் புரிந்து கொண்டு எழுத்து வடிவாக மாற்றும் செல்போன்

பேசுவதைப் புரிந்து கொண்டு எழுத்து வடிவில் (டெக்ஸ் மெசேஜ்) மாற்றிக் கொள்ளும் செல்போனை சாம்சங் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தென் கொரியாவைச் சேர்ந்த இந்த நிறுவனத்தின் இரு புதிய மாடல்களில் இந்த வசதி உள்ளது. வாடிக்கை யாளர்கள் செல்போன்மூலம் பிறரைத் தொடர்பு கொள்வதில் மாபெரும் மாற்றத்தை இந்தத் தொழிநுட்பம் ஏற்படுத்தும் என சாம்சங் எலெக்ரானிக்ஸ் நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் பீட்டர் ஷார்ஜைன்ஸ்கி கூறினார்.செய்திகளை வாடிக்கையாளர்கள் கூறினாலே செல்போன் புரிந்து கொள்ளும். அவர்கள் செல்போன் பட்டன்களை அழுத்து வதற்குப் பதிலாக பேசினாலே போதும் என்ற முறை முதல் முறையாக உருவாகியுள்ளது. இதன் மூலம் தகவல் அனுப்பும் நடைமுறைகள் மிக எளிமையாகி உள்ளன எனவும் அவர் கூறினார். மேலும் கோல் மீஜ வில்காஸ்யூ லேட்டர் போன்ற ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட தகவல்களையும் அனுப்பலாம். வெறுமனே அந்த வார்த்தைகளைக் கூறினாலே போதும் தகவல் போய்ச் சேர்ந்துவிடும்.

உலகின் செல்போன் சாதனங்கள் விற்பனையில் மோட்ட ரோலாவை முறியடித்து இரண்டாமிடத்துக்கு முன்னேறி யுள்ளது சாம்சங். முதலிடத்தில் தொடர்ந்து நொக்கியா இருந்து வருகிறது. உலக செல்போன் விற்பனைச் சந்தையில் நொக்கியாவுக்கு 30.9சதவீதமும் சாம்சங்குக்கு 13.8 சதவீதமும் மோட்டரோலாவுக்கு 13.4சதவீதமும் பங்குள்ளது.



## இல.யில் சுனாமியால் 858 சிறுவர்கள் பெற்றோரைவிட்டுப் பிரிந்துள்ளனர்

இலங்கையில் சுனாமி காரணமாக 858 சிறுவர்கள் தமது பெற்றோர்களைப் பிரிந்துள்ளதாக யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டன இதன்படி மட்டக்களப்பில் மாத்திரம் 346 சிறுவர்கள் தமது பெற்றோர்களைப் பிரிந்துள்ளனர். இதேவேளை நாடு முழுவதும் சுனாமி காரணமாக பெற்றோரில் தந்தையை அல்லது தாயை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 3202 ஆகும். இதில் அம்பாறையில் மாத்திரம் 954 சிறுவர்கள் உள்ளடங்குகிறார்கள். இந்த நிலையில் தற்சமயம் யுனிசெப் நிறுவனம் சிறுவர்களைப் பாதுகாக்கும் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. சிறுவர் துஸ்பிரயோகம், சிறுவர் கடத்தல் என்பவற்றில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக தமது உறுப்பினர்களை அதிகமாக களத்தில் ஈடுபடுத்தவுள்ளதாகவும், ஊடக மாநாட்டில் யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி டெட் சைபான் தெரிவித்தார். இவர்களின் விஜயத்தை தொடர்ந்து நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜோன் பீட்டர்சனும் இலங்கை வரவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார் இந்த விஜயத்தின் போது நோர்வே தரப்பினர் சமாதான முயற்சிகளுடன் இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (32)

## புனரமைப்புக் குறித்து கட்சிகளிடையே பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தப் பேசுவோம்

### மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

நாட்டின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையே பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகு மென மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில்,

இப்பிரச்சினை தொடர்பாக ஜே.வி.பி யைப் போன்றே ஐ.தே கட்சியும் சனாதிபதிக்கு யோசனைகளை முன்வைத்துள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள அனர்த்தத்திலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தேசிய இணக்கப்பாட்டுடன் பொதுவாக வேலைத்திட்டத்திற்கு அமைய செயற்பட வேண்டு மென யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சகலரும் ஒன்றிணைந்து தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைய செயற்படுவதற்கு பொது இணக்கப்பாட்டின் பேரில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப் பட்டு அதற்கமைய வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென இரு சாராரும் கருதுகின்றனர். அடுத்த வாரம் தொடக்கம் இது பற்றிய பேச்சுவார்த்தை நடத்தப்படுமென மேலும் தெரிவித்துள்ளார்.

# சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை சிறிலங்கா அரசு நழுவ விடுகிறது

## சுனாமியால் சேதமடைந்த வீதிகளை புனரமைக்க கனடா முன்வந்துள்ளது

சுனாமியால் சேதமடைந்த வீதிகளைப் புனரமைக்கும் வேலைத் திட்டத்திற்கு உதவுவதற்கு கனடா முன் வந்துள்ளது.

இதற்குத் தேவையான இயந்திர உபகரணங்களை ஏற்றி வந்த விமானம் கடந்த புதன்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இதே வேளை பிரேசிலைச் சேர்ந்த நிவாரண சேவைக்குழுவினர் நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தனர். அத்துடன் இயற்கை அனர்த்தத் தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென பிரேசில் 76ஆயிரம் கிலோ கிராம் சீனியை அன்பளிப்புச் செய்துள்ளது. இதனை ஏற்றி வந்த விமானம் இலங்கையை வந்தடைந்துள்ளது.

## காலி நகரத்தை வேறு இடத்திற்கு மாற்ற நடவழக்கை

(கொழும்பு)

காலிநகரத்தை வேறுஇடத்திற்கு மாற்றப் போவதாக காலிமாவட்ட அரசாங்கஅதிபர் தெரிவித்துள்ளார்.சுனாமி பேரழிவுக்கு பின் காலி நகரம் முற்றாக சேதமடைந்துள்ளது. மேலும் காலிநகரம் கடற்கரையோரத்தில் இருக்கின்றபடியால் அதிகமான அழிவுகளைச் சந்தித்துள்ளது. ஆகவே அந்த நகரத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு காலி மாவட்ட அரசாங்க அதிபர் முய்ற்சி மேற்கொண்டுள்ளார்.

கடற்கரைப் பகுதிகளில் இனி மக்கள் வாழ்வதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது.3,364 குடும்பங்கள் முற்றாக இருப்பிடங்களை இழந்து முகாம்களில் வசிக்கின்றபடியால் மக்கள் வாழ்வதற்கு வீடுகள், கட்டடங்கள் யாவும் வேறு இடத்தில் நிர்மாணிப்பதென காலி அரச அதிபர் தெரிவித்தார்.

## "லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்" ஆசிரிய தலையங்கம் விபரிப்பு

**சுனாமி பேரலையால் ஏற்பட்ட பேரழிவிற்குப் பின்னரும் கூட மனிதாபிமான நடவடிக்கைகளைப் பின்தள்ளிவிட்டு மீண்டுமொரு யுத்தகளத்தை நோக்கியே காய்கள் நகர்த்தப்பட்டு வரும் அபாயகரமான சூழ்நிலை தோன்றியுள்ளது. சிறிலங்கா அரசு தமிழ் மக்களுடனான நட்புறவைப் பேண கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தினை கைநழுவவிடக்கூடாது என "லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்" எனும் அமெரிக்க பத்திரிகை நேற்று முன்தினம் தனது ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.**

சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தற்போதைய நிலைகுறித்து மேலும் அந்தப் பத்திரிகை விபரிக்கையில், சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த விரிசல் நிலை ஆழிப்பேரலையின் தாக்கத்திற்குப் பின்னர் ஒரு சுமூகநிலையினை அடையக் கூடியதாக இருந்த அரிய சந்தர்ப்பத்தினை சிறிலங்கா அரசு வீணடித்துவருவது போலவே தெரிகின்றது. நீண்டகாலமாக உள்நாட்டு யுத்தமொன்றில் ஈடுபட்டது மட்டுமன்றி 60,000க்கும் மேலான மக்களும் கொல்லப்பட்டிருந்தனர். இப் போரினால் இறந்தவர்கள் எண்ணிக்கையோ கிட்டத்தட்ட ஆழிப் பேரலையினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்காகும். இவ்வாறானதொரு பேரழிவிற்குப் பின்னரும் கூட, மனிதாபிமான நடவடிக்கைகளை பின்தள்ளி விட்டு மீண்டும் ஒரு யுத்த களத்தை நோக்கியே காய்கள் நகர்த்தப்பட்டு வரும் அபாயகரமான சூழ்நிலை தோன்றியுள்ளது. சிறிலங்கா அரசு தமிழ் மக்களுடனான நட்புறவை பேணக் கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தினை கை நழுவவிடக்கூடாது. குறிப்பாக, இலங்கைத் தீவை ஆழிப்பேரலை தாக்க முன்னரே கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் கடைப்பிடித்து வரும் யுத்த நிறுத்தம் முடிவிற்கு வரும் ஒரு அபாயகரமான சூழ்நிலை இருந்தது. ஆழிப்பேரலையின் கொடூரத்தின் பின்னர், தமிழர் பிரதேசங்களுக்கான நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் பல பாரபட்சங்கள் இருந்து வருவதாக தமிழ் மக்கள் தங்கள் ஆட்சேபனைகளைத் தெரிவித்து வந்தனர். சிறிலங்கா அரசோ அவர்களது ஆட்சேபனைகளை நிராகரித்த அதே வேளை, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானைத் தமிழர் பிரதேசங்களைப் பார்வையிட விடாது பாதுகாப்பு சிக்கல்களைக் காரணம் காட்டி அனுமதியளிக்க மறுத்தது. அவ்வாறு கொபி அனான் தமிழர் பிரதேசங்களுக்கு பயணம் செய்து விடுதலைப் புலிகளுடனான சந்திப்புக்களை மேற்கொண்டிருப்பின், அந்தப் பயணம் தனியானதொரு தமிழ் அரசு இருப்பதனை மறைமுகமாக உறுதிப்படுத்துவதாக இருந்திருக்கும் என சிறிலங்கா அரசு அச்சம் கொண்டதே உண்மை எனவும் அப் பத்திரிகை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## சூழ்நிலையைச் சாதகமாக்கி அத்து மீறும் இந்திய மீனவர்

சுனாமிப்பேரலையின் அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்தும், தங்களுக்கு ஏற்படக்கூடிய உயிராபத்துகளுக்கு அஞ்சியும் இலங்கை மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடாமல் இருந்து வருவது தெரிந்ததே.

இச் சந்தர்ப்பத்தினைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் தலைமன்னார் மற்றும் உறுமலை ஆகிய பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. ஆழிப்பேரலையின் அனர்த்தம் நடந்த ஒரு வாரத்தில் கிட்டத்தட்ட 50 பேர் அடங்கிய இந்திய மீனவர்கள் மன்னாரின் தெற்குப் பகுதியை அண்மித்த ஆழ்கடல் பகுதிகளில் திருட்டுத்தனமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததை சிறிலங்கா கடற்படை பேச்சாளர் ஒருவரும் உறுதிப்படுத்தியுள்ளார். இது போலவே, மறுதினமும் 100 பேர் வரையிலான மீனவர்கள் உறுமலை கடற்பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக சிறிலங்கா கடற்படை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். கடந்த செவ்வாய் அன்றும் இது போன்றே கிட்டத்தட்ட 125 இற்கும் மேலானவர்கள் உறுமலைப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## படையினரின் நடவடிக்கை இருதரப்பு உறவைப் பாதிக்கும்

### –டொன்புறாவ் ஹொவ்டே எச்சரிக்கை–

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பணிகளுக்கு பல்வேறு கெடுபிடிகளை ஏற்படுத்தி வருகின்ற சிறிலங்காப் படையினரின் நடவடிக்கைகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று முன் தினம் நேரில் சென்று படையினரை எச்சரித்துள்ளனர்.

திருமலையில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் அவசரமாக வன்னி நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த வேளை கட்டைப்பறிச்சான் சிறிலங்கா இராணுவ முகாம் படையினர் இடையூறு விளைவித்தது குறித்தே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் படையினரை எச்சரித்துள்ளார். எழிலன் அடையாள அட்டையைக் காண்பித்த பின்னரும் அவரின் ஆவணங்களைச் சோதனையிட வேண்டுமென எச்சரித்துள்ளமையானது இரு தரப்பு உறவுகளைப் பாதிக்கும் நடவடிக்கை எனவும் இந்நடவடிக்கை போர் நிறுத்த நடைமுறைக்கு ஏற்புடையதல்ல எனவும் கண்காணிப்புக் குழுவினர் படையினரை எச்சரித்துள்ளனர்.

## க.பொ.த.உ/தபரீட்சை எழுதவுள்ள 8000 மாணவர்கள் அகதி முகாம்களில்

### –கல்வி நிறுவகப் பணிப்பாளர் ஜகத் விக்கிரமசிங்க

(கொழும்பு)

சுனாமி பேரலையின் பின் எதிர்வரும் ஏப்ரல் மாதம் கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைகள் எழுதும் 8000 மாணவர்கள் தற்பொழுது அகதி முகாம்களில் தங்கியுள்ளனர் என தேசியக்கல்வி நிறுவகப் பணிப்பாளர் ஜகத் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்களிடத்தில் புத்தகங்களும், ஏனைய பாடங்கள் சம்பந்தமான குறிப்புகளும் இல்லாத படியால் சக மாணவர்களிடத்தில் பாடக் குறிப்புக்களைப் பெற்று அதன் பிரதிகளை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

# கனடாப்பிரதமர் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு விஜயம் செய்யவேண்டுமாவென கருத்துக்கணிப்பு

## -கனடாவின் பல்லின தொலைக்காட்சி நிறுவனம் தமிழருக்கும் அழைப்பு

கனடாவின்பல்லினத் தொலைக்காட்சியான ஓம்னி தொலைக்காட்சி நிறுவனம் நடாத்தும் கருத்துக் கணிப்பில், கனேடியப் பிரதமர் போல் மார்ட்டீன், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று கருதுகிறீர்களா என்று பொதுமக்களிடம் கருத்துக் கேட்கப்பட்டுள்ளது.

இதில் கலந்துகொள்ள விரும்புவோர் 416-260-4005 என்ற இலக்கத்தை அழைத்து, ஆம் என்று பதிலளிக்க விரும்பினால் 1 ஐயும், இல்லை என்று பதிலளிக்க விரும்பினால் 2 ஐயும் அழுத்த வேண்டும். ரொரன்ரோ பெரும்பாகத்திற்கு வெளியே வாழ்பவர்கள் அல்லது வெளிநாட்டில் வாழ்பவர்கள், இந்தத் தொலைபேசி இலக்கத்திற்கு முன்னே 1 என்ற ரொரன்ரோ நகருக்கான இலக்கத்தை இணைப்பது அவசியம். கனேடியப் பிரதமர் போல் மார்ட்டீன் அவர்கள், விடுதலைப் புலிகளின் கட்டுப்பா[illegible]டுப் பகுதிக்கு விஜயம் மேற்கொ[illegible]ள மாட்டார் என்று சிறிலங்கா அ[illegible] அறிவித்துள்ள நிலையில், தாயக மக்கள் தங்கள் விருப்பை இக் கணிப்பீட்டின் மூலம் மட்டுமல்லாது, தங்களது பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களூடாகவும், நேரடியாக தொலைநகல் அல்லது ஈமெயில் மூலமாகவும் [illegible]பிரதமரது காரியாலயத்திற்குத் [illegible]தெரியப் படுத்துவது அவசியம[illegible] என்று தெரிவிக்கப்படுகிறது



ஐக்கிய சுகாதார சேவைகள் தொழிற்சங்க ஒன்றிய தாதிமார் சங்க குழுவினர் கிளிமாவட்ட வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் கூடத்தில் உள்ள உப கரணங்களை மறுசீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளமையினை படத்தில் காணலாம். (படம் சோதி)

# கல்முனையில் கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்கு மக்கள் எதிர்ப்பு

கல்முனை பிரதேசத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பான சேதங்கள் மதிப்பீடு செய்யப்படாமல் கட்டட இடிபாடுகள் அகற்றப்படுவதற்கு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

நேற்று கல்முனை பிரதேசத்தில் இக் கட்டட இடிபாடுகளை அகற்றச் சென்ற மாநகர சபை ஊழியர்கள் பாதிக்கப்பட்ட மக்கள் காட்டிய எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக தமது நடவடிக்கையை கைவிட்டு திரும்பியுள்ளார்கள். 8 கனரக வாகனங்கள் மற்றும் 8 உழவு இயந்திரங்கள் சகிதம் மாநகர சபை ஊழியர்கள் கட்டட இடிபாடுகளை அகற்றச் சென்ற சமயம் அதனைத் தடுத்த பொது மக்கள் வாகனங்களின் குறுக்கே அமர்ந்து அதனைச் செல்ல விடாமல் தடுத்தனர். மேற்குறிப்பிட்ட கோரிக்கையுடன் தாங்கள் எதிர்காலத்தில் எங்கே புதிதாக குடியமர்த்தப்பட இருக்கின்றோம் என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என்றும் மற்றுமொரு கோரிக்கையையும் முன் வைத்துள்ளனர். இருப்பினும் மாநகர சபை ஆணையாளர் எம்சலீம், அம்பாறை அரசாங்க அதிபர் ஹேரத் அபயரத்னவுடன் தொடர்பு கொண்ட பின்னர் அளித்த உறுதிமொழியையடுத்து எதிரப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட்டதோடு வாகனங்களும் விடுவிக்கப்பட்டன.


# முக்கிய அறிவித்தல்

## வருடாந்தப் பொதுக் கூட்டம் –2004

பிற்போடப்பட்டிருந்த வடபிராந்திய பாரஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 2005. 01. 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளதினால் மீளாய்வு செய்யப்பட்டு உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும் தவறாது இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

* பொதுச் சுடர் ஏற்றல்
* கொடி ஏற்றல்
* அகவணக்கம்
* தலைவர் தலைமையுரை
* உதவி ஆணையாளர் உரை
* புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
* புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
* சிறப்புரை
* ஏனைய விடயங்கள்
* நன்றியுரை

சி. பாஸ்கரன் — தலைவர்

க.சி. மணியம், — செயலாளர்.

(சி-11077)


# அச்சமடைய தேவையில்லை

கடலுணவுகளால் நோய்கள் ஏற்படும் என்று மக்கள் அச்சமடையத் தேவையில்லை என விஞ்ஞான தொழில்நுட்பத் துறை அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்துள்ளார்.

கடலுணவுகளை உட்கொண்டால் நோய் ஏற்படும் என மக்கள் மத்தியில் அச்ச நிலை தோன்றியுள்ளது.கடலுணவுகளால் நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. கடலுணவை மக்கள் புறக்கணிப்பதால் மீன்பிடித் தொழிலாளர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.ஏற்கனவே சுனாமி அலைகளால் பாதிக்கப்பட்ட மீன்பிடி தொழிலாளர்கள் தற்போது கடலுணவுகளை மக்கள் புறக்கணிப்பதன் காரணமாக தமது வாழ்வைக் கொண்டு செல்வதற்கு மிகவும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.

நாட்டில் மீன்களைப் பதனிடும் வசதிகள் பெருமளவில் இல்லை இதனால் தற்போது பிடிக்கப்படும் மீன்கள் பெருமளவில் வீணாகி வருகின்றதென அவர் மேலும் கூறியுள்ளார். (32)

# மாரடைப்பால் வயோதிபர் மரணம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் ஆணின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் மாலை 3.00மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றிப் மேலும் தெரிய வருகையில் 916, கட்சன் வீதியில் வசிக்கும் பிரான்சிஸ் சேவியர் (வயது 73) என்பவரே உயிர் இழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். ஆணின் சடலம் காணப்பட்டவுடன் அப்பகுதி மக்கள் அப்பகுதி காவல்பணிமனையினருடன் தொடர்புகொண்டதையடுத்து ஸ்தலத்திற்கு காவல்துறையினர் விரைந்து சென்று விசாரணையை நடத்தினர். அத்தோடு வட்டக்கச்சி மருத்துவமனை வைத்தியர் வீரகத்திப் பிள்ளை சம்பவ இடத்துக்குச் சென்று மரணம்பற்றி ஊர்ஜிதம் செய்தார்.

மாரடைப்பால் ஏற்பட்டது இம் மரணம் எனக் கூறப்பட்டது. வயோதிபரின் சடலம் மேல் பரிசோதனைக்காக கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மேலதிக விசாரணையை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (12)


# University of Jaffna
## Faculty of Graduate Studies

**Commencement of courses for the Academic year 2004/05**

The lectures for following courses are scheduled to commence on

| | |
|---|---|
| 1.PGD in Education (full time) 2004/05 | 17.01.2005-9.00a.m |
| 2.PGD in Education (part time I) 2004/06 (Batch II Jaffna) | 22.01.2005-9.00a.m |
| 3.Master of Education 2004/05 (Jaffna- Batch V& Vavuniya Batch II) | 22.01.2005-9.00a.m |
| 4.PGD in Education (Part time II) 2003/05 (Jaffna - Batch I& Vavuniya Batch I) | 22..01.2005-9.00a.m |

Selected candidates have been informed by post, enabling them to register for these courses on or before 17.01.2005

Vice Chancellor,
13.01.2005

(சி-11078)



கிளி/தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் பின்வரும் பதவி நிலைக்கு

# விண்ணப்பம் கோரப்படுகின்றது

**பதிவாளர்** Registrar

1.க.பொ.த. உயர்தரத்தில் சித்தி

2. முகாமைத்துவ நிர்வாக நிலையில் ஐந்து வருடத்திற்கு குறையாத அனுபவம்

3.கணனி பயன்படுத்தலில் அனுபவம் உள்ளவர்

ஆவர்வமுள்ள ஆ[illegible]ண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி தகைமை உள்ளவர்கள் மட்டும் எதிர்வரும் 30.01.2005க்கு முன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் கீழ்வரும் முகவரிக்கு நேரடியாகவே அல்லது கடித மூலமோ அனுப்பி வைக்கவேண்டும். 07.02.2005ஆம் திகதி காலை 9.00 மணியிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சை எமது காரியாலயத்தில் நடைபெறும் மேற்குறிப்பிட்ட தகைமை உள்ளவர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிப்பதற்கான கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

அதிபர்,
கிளி/ தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி-11075)



# பகிரங்க ஏல விற்பனை

கட்டாக்காலி கால் நடைகள் கட்டுப்படுத்தல் நடைமுறைக்கு கிளிநகர் பிரதேசத்தில் பயிர் அழிவுகளையும் வீதி விபத்துக்களையும் உண்டு பண்ணிய பன்னிரண்டு (12) கால் நடைகள் கடந்த 15 நாட்களாக உரிமை கோரப்படா நிலையில் உள்ளன. எனவே இக் கால் நடைகள் யாவும் எதிர் வரும் 18/01/2005 இற்கு முன்னர் உரிமையாளர் பெற்றுக் கொள்ளத்தவறின் அதே திகதியில் காலை 10 மணிக்கு கணேசபுரம் கமக்கார அமைப்பின் கால்நடை பொதுப்பட்டியில் வைத்து பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**கால் நடைகள் விபரம்.**

1. TR மறப.171 கறுப்பு பசு.
2. பரா 44 வெள்ளைப் பசு.
3. KT மா வெள்ளைப் பசு.
4. SE மா வெள்ளைப் பசு.
5. நி. கழுகன் சுட்டி நாம்பன்.
6. சிவப்பு பசுக்கன்று குறி இல்லை.
7. வெள்ளைப் பூச்சி பசுக்கன்று குறி இல்லை.
8. கறுப்பு நாம்பன் கன்று குறி இல்லை.
9. சிவப்புக் கழுகன் நாம்பன் கன்று குறி இல்லை.
10. TA வெள்ளைப் பூச்சிப் பசு.
11. SAî கறுப்புப் பசு.
12. PS வெள்ளைப் பூச்சிப் பசு.

த.பொ.மே.நிறுவனம்
கிளிநொச்சி

(5558)

# சார்க் நாடுகளின் உச்சி மாநாடு பெப்ரவரி 6-இல் நடைபெற ஏற்பாடு

சுனாமி பேரழிவால் ஒத்திவைக் கப்பட்ட சார்க் உச்சி மாநாடு பங் களா தேஷ் தலைநகர் டாக்காவில் வருகிற பெப்ரவரி மாதம் 6 மற் றும்7 ஆம் திகதிகளில் நடைபெற லாம் . என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியா,பாகிஸ்தான், இலங்கை, மாலைதீவு, பங்களாதேஷ், நேபா ளம்,பூட்டான் ஆகிய 7 நாடுகள் சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. சார்க் உச்சி மாநாடு பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் கடந்த 9 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடத் தத் திட்டமிடப்பட்டது.

ஆனால் கடந்த மாதம் 26 ஆம் திகதி சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளில் சுனாமி பேரலை தாக்கியது. இதனால் இந்த 3 நாடுகளிலும் பல ஆயிரக்கணக்கானோர் பலி யானார்கள்.

இந்த நாடுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவார ணப் பணிகள் தீவிரமாக நடை பெற்றன. எனவே இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடு களின் தலைவர்கள் சார்க் மாநாட் டில் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், சார்க் உச்சி மாநாட்டை தள்ளிவைக்க பங்களாதேஷ் பிரதமர் காலிதா ஜியா முடிவு செய்தார். இந்நிலை யில் சார்க் மாநாட்டின் தலைவர் பதவியில் இருந்து விலகிச் செல்லும் பாகிஸ்தானிடம் வருகிற பெப்ரவரி மாதம் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் சார்க் மாநாட்டை நடத் தலாம் என்று இந்தியா யோசனை தெரிவித்தது. சார்க் மாநாட்டிற்கான திகதிகளை உறுதி செய்வதற் காக சார்க் நாடுகளின் மற்ற தலைவர்களுடன் வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் தொலை பேசியில் பேசினார்.

எனவே சார்க் உச்சி மாநாடு வருகிற பெப்ரவரி மாதம் 6 மற்றும் 7 ஆகிய திகதிகளில் டாக்காவில் நடைபெறலாம் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. அதேசமயம் சுனாமி நிவாரணப் பணிகளில் தலை வர்கள் ஈடுபட்டுள்ளதால் சார்க் உச்சி மாநாடு3 நாட்கள் நடை பெறு வதற்குப் பதிலாக 2 நாட் களாகக் குறைக்கவும் திட்டமிடப்பட் டுள்ளது என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் உச்சி மாநாட்டிற்கு ஒருநாள் முன்ன தாக நடத்தப்படும் என்று அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



புதுடில்லியில் அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகன்சிங் சந்தித்தபோது எடுத்த படம்.

# நாகலாந்தில் அமைதிப் பேச்சுவார்த்தை இம்மாத இறுதியில் மீண்டும் ஆரம்பம்

நாகா அமைதிப்பேச்சுவார்த்தை இம்மாத இறுதியிலோ அல்லது அடுத்த மாத ஆரம்பத்திலோ மீண்டும் நடைபெறும் என அறிவிக் கப்பட்டுள்ளது.நாகலாந்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாகா தீவிரவாதிகள் ஆயுதம் ஏந்தி போராடி வருகின்றமை தெரிந்ததே.

கடந்த பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகு மத்தியில் பொறுப் பேற்றுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தனது குறைந்தபட்ச செயல்திட்டத்தில் நாகா தீவிரவாதிகளுடன் அமைதிப்பேச்சு நடத்தப் படும் என உறுதி அளித்தது.

அதன்படி அண்மையில் நாகா தீவிரவாதத்தலைவர்களுடன் மத்திய அரசு அமைதிப் பேச்சு நடத்தியது. ஆனால் அந்தப் பேச்சுவார்த் தைகளில் எந்தத் தீர்வும் காணப்படவில்லை . இதனால் மீண்டும் அமைதிப் பேச்சுநடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து நாகலாந்து தீவிரவாதிகளின் மூத்த தலைவரும், தூது வருமான பி.எஸ். அபம் நிருபர்களிடம் கூறுகையில் " அமைதிப பேச்சு வார்த்தை இம்மாத இறுதியிலோ அல்லது அடுத்தமாத ஆரம்பத்திலோ நடைபெறும். இந்தமுறை மத்திய அமைச்சர்களில் சிலரும் அமைதிப் பேச்சில் பங்கேற்பார்கள்" என்று தெரிவித்தார்.

ஏற்கனவே எங்களது கோரிக்கை மகஜரை மத்திய அரசிடம் அறிவித்துள்ளோம். அதன் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெறும் என்றும் அவர் கூறினார். அமைதிப் பேச்சுவார்த்தையில் மத்திய அமைச் சர்கள் இஸ்தார் பெர்னாண்டஸ், பிருத்விராஜ் சவுகான், எஸ்.ரகுபதி ஆகியோரும், நாகலாந்து தீவிரவாதிகள் சார்பில் இசாக்கிசீசூ, டி.முய்வா ஆகியோரும் பங்கேற்கலாம் எனத் தெரியவருகிறது.

நாகலாந்து உள்துறை அமைச்சர் ராய்சிங்கும் இந்தப் பேச்சுவார்த் தையில் உதவியாக இருப்பார் எனத் தெரிகிறது.

# பீகார் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் கூட்டணிக்குள் முறுகல்!

## தொகுதிப் பங்கீட்டில் தன்னிச்சையான முடிவு

பீகாரில் 80 சட்டசபைத் தொகு திகளில் போட்டியிடப்போவதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. மொத்தமுள்ள 243 தொகுதிகளில் 80இல்தனது கட்சி வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்று காங்கிரஸ் அறிவித்துள்ளது.

ஆயினும் கூட்டணி வைக்கும் விடயத்தில் இன்னும் திறந்த மனது டன் இருப்பதாக காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. காங்கிரஸ் இப்படி தன்னிச்சையாக அறிவிப்பு வெளியிட்டிருப்பது ராஷ்ட்ரீய ஜனதாதள தலைவர் லல்லுப் பிரசாத்துக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தும் என்றும் கருதப்படுகிறது.

பீகார், ஜார்க்கண்ட் சட்டசபைத் தேர்தல் தொடர்பாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும், லல்லுப்பிரசாத்யாதவும் பேச்சு நடத்தினர். எனினும், அதில் முடி வேதும் எடுக்க முடியாமல் போனது. முட்டுக்கட்டைநிலை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் மூத்த தலைவர்களுடன் சோனியா ஆலோசனை நடத்தியதாகக் கூறப்படு கிறது. அந்த ஆலோசனைக்குப் பிறகு 80 தொகுதிகளில் போட்டியிடப்போவதாக காங்கிரஸ் அறிவித்துள்ளது.

பீகாரில் காங்கிரசுக்கு 30 தொகுதிகளுக்கு மேல் ஒதுக்க முடி யாது. என்பதில் லல்லுப் பிரசாத் உறுதியுடன் இருக்கிறார். காங் கிரஸ் அறிவிப்பைத் தொடர்ந்து லல்லு என்ன செய்யப்போகிறார் என்பது கேள்விக்குறியாக உள்ளது.


# பொன்விழாவினுள் நுழைகிறது




# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி



15.01-1955 இல் பிறப்பெடுத்த மு. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 15.01.2005ஆம் நாள் பொன்விழாக்காண நுழைகிறது. இந்நாளை பொன்னாளாகக் கருதி பெருவிழாவெடுக்க திட்ட மிட்டாலும் சுனாமியின் சோகங்கள் அதைத் தடுத்துவிட்டன. ஆதலால் இந்நாளில் சுனாமியால் கவர்ந்தவர் ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிபாடுகளை ஆற்றி நிற்கிறோம். பல்லாயிரம் போராளி களை,மாவீரர்களை, வைத்தியர்களை, பொறியியலாளர்களை, பட்டதாரிகளை, அறிவாளிகளை, அன்பாளர்களை உருவாக்கிய பள்ளி 50 ஆண்டுகளில் பெற்ற வளர்ச்சிக்கு மதிப்பெண் கிடையாது. சைவப்பாடசாலை, மகாவித்தியாலயம் என்று வயதுக்கு வயது பெயர் மாற்றம் பெற்ற இப்பள்ளி பொன்விழாக் காலத்துள் நுழையும் போது மத்திய கல்லூரியாக தரமுயர்ந் துள்ளது."பால் தந்த பானை" என்று படித்தவர்களால் நேசிக்கப்படும் எம் பள்ளியை பொன் விழாக்காலத்தில் மேலும் வளர்க்க நேசமானவர்களின் உதவி ஆயிரம் ஆயிரம் வெளிநாடுகளில் வாழும் படித்த உள்ளங்கள் வாரிவழங்கி வளர்க்க அயராது பாடுபடுகிறார்கள். அது போல் இங்கும் எங்கும் வாழ்வோரும் இதய சுத்தத்துடன் பள்ளி வளர்ச்சியின் கண்ணாக இருக் கிறார்கள். ஆலமரச் சோலையில் வேலவனின் அயலில் கேட்போர் கூடம், நல்லதோர் படிப்பகம், நாமம் தாங்கிய முகப்பு, நிர்வாக அலுவலகம் என்று பொன்விழா ஞாபகம் வளங்களாக வரை இருக்கின்றது. அந்த வளங்களின் ஆரம்ப நாள் 15.01.2005 ஆகும். 2005 ஆம் ஆண்டில் புதிய வளங்கூட்டி புதுப்பொலிவுடன் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி புன்னகையுடன் வாழ எமது வாழ்த்துக்கள்.

பழைய மாணவர்கள்,
மு.புதுக்குடியிருப்பு

(சி.11199)

## உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி
## அவுஸ். அணியில் வோர்ன் இடம் பிடிப்பார்



பொண்டிங்

மேற்கிந்தியத்தீவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் அவுஸ் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னின் பெயர் பரிசீலிக்கப்படும என அவுஸ் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நம்பிக்கை சுழற்பந்து வீச்சாளர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். 2003 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டி தென்னாபிரிக்காவில் நடந்தது. போட்டி தொடங்க சரியாக 2 மணி நேரம் இருந்த போது வோர்ன் ஊக்க மருந்து பயன்படுத்திய பிரச்சினையில் சிக்கினார். இதனால் உலக கோப்பையில் அவர் கலந்து கொள்ளவில்லை. இதன் பின்னர் நடந்த விசாரணையில் வோர்ன் தனது தவறை ஒத்துக் கொண்டார். இதற்காக அவருக்கு ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்டது. இதன் பின்னர் அவர் ஒரு நாள் போட்டி எதிலும் கலந்து கொள்ள வில்லை. இருந்த போதும் மேற்கிந்தியத் தீவில் நடக்கும் அடுத்த உலக கிண்ணத்தில் வோர்ன் கலந்துகொள்வார் என்று அணித்தலைவர் பொண்டிங் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறினார். இளம் வீரர்களை அணியில் ஊக்கப்படுத்தும் முயற்சி தற்போது நடந்து வருகிறது. அவர்கள் பிரகாசிக்காத பட்சத்தில் உலக கோப்பைக்கான அணியில் நிச்சயம் வோர்னின் பெயர் பரிசீலிக்கப்படும் என்று பொண்டிங் கூறினார்.


### முக்கோண ஒரு நாள் போட்டி
## பிரெட்லீ, பிரட்ஹொக் சிறப்பான பந்துவீச்சு
## முதலாவது போட்டியில் அவுசுக்கு அபார வெற்றி



அவுஸ்திரேலியா மேற்கிந்தியத்தீவுகள் பாகிஸ்தான் அணிகள் கலந்து கொள்ளும் மும்முனைக் கிரிக்கெட் தொடரின் முதாலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி 116 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

மெல்பேர்னில் நேற்று ஆரம்பமான முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை எதிர்த்து அவுஸ்திரேலிய அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா



முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 301 ஓட்டங்களைக் குவித்தது.

ஆரம்பத்தில் கில்கிறிஸ்டின் விக்கெட்டை அணியின் ஓட்ட எண்ணிக்கை 4 ஆக இருக்கின்ற போது இழந்த அவுஸ்திரேலியா தடுமாறும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் இரண்டாவது விக்கெட்டுக்காக கிளார்க், பொண்டிங் இணை அபாரமாக ஆடி 119 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் கிளார்க் 66, பொண்டிங் 78, மாட்டீன் ஆட்டமிழக்காது 95 ஓட்டங்களை முறையே குவித்தனர்.



இவர்களை விட சைமன்ஸ் 20 ஓட்டங்களையும் லீமன் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரெட்சோ 2 விக்கெட்டுகளையும், சாமூவேல்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 302 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம் புகுந்த மேற்கிந்தியத்தீவு ஆரம்பம் முதலே பிரெட்லீயின் பந்து வீச்சில் நிலை குலைந்ததுடன் பிரெட்ஹொக்கின் சுழல் பந்து வீச்சுக்கு விக்கெட்டுக்களை மளமள வென இழந்ததுடன் 46.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் லாறா58, சந்தர்போல் 46 ஓட்டங்களை முறையே அதிகபட்சமாக பெற்றனர். பந்து வீச்சில் பிரெட்லீ 3 விக்கெட்டுக்களையும் பிரட்ஹொக் 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

## தொடரைக் கைப்பற்றினாலேயே எங்கள் வேலை முழுமையடையும்


பஷார்

"சிட்டகொங் வெற்றி எங்களுக்கு அதிக நம்பிக்கையை அளித்துள்ளது. இரண்டாவது போட்டியிலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றினால் தான் எங்கள் வேலை முழுமையாக முடியும். இப்போதைக்கு நாங்கள் பாதிக் கடலைத் தான் கடந்துள்ளோம்'' என்கிறார் வங்கதேச அணித் தலைவர் ஹபிபுல் பஷார்.

இந்த அணியின் பயிற்சியாளர் வட்மோர் கூறுகையில், "சிட்டகொங் போட்டிக்கு முன்னதாக ஒரு வெற்றிகூட பெறாமல் இருந்ததால் நெருக்கடியில் இருந்தோம். சிறப்பாக ஆடி முதல் வெற்றி பெற்றோம். ஆனால், முதல் முறையாக டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்பதால் இப்போதும் எங்களுக்கு அதே நெருக்கடி நீடிக்கிறது'' என்றார். இந்தப் போட்டியில் வங்கதேச அணி குறைந்த பட்சம் சமன் செய்தாலே போதும். முதல் முறையாக டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி கோப்பையை வென்றுவிடலாம். இதனால் இரண்டாவது போட்டி விறுவிறுப்பை ஏற்படுத்தியுள்ளது.





## அன்ருஸ்ரோசின் சிறப்பு துடுப்பாட்டத்தால்
## இங்கிலாந்து அணி வலுவான நிலையில்



தென்னாபிரிக்க- இங்கிலாந்து அணிகளுக்கிடையில் யோகன்னஸ் பேர்க்கில் நடைபெற்றுவரும் நான்காவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று முதலில் துடுப்பெடுத்தாடும் இங்கிலாந்து அணி ஆட்ட நேர முடிவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 411 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் அன்ருஸ்ரோஸ் தனது



வழ்மையான ஆட்டத்தை வெளிப்படுத்தி 147 ஓட்டங்களையும், வொவின்கி 83 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது வோகன் 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பந்து வீச்சில் மக்காயா நிற்றினி நான்கு விக்கெட்டுக்களையும், பொலக் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது நாள் ஆட்டம் கால நிலை சீரின்மையால் காலதாமதமாக ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.


## மகாராணியின் கூற்றை மறுக்கிறார் மைக்லீ



ஒலிம்பிக் போட்டிகள் 2012ஆம் ஆண்டு லண்டனில் நடைபெறுவது சாத்தியமற்றது என இங்கிலாந்தின் மகாராணி தெரிவித்துள்ளதை 2012ஆம் ஆண்டின் ஒலிம்பிக் பேச்சாளரான மைக்லீ மறுத்துள்ளார். றோயல் குடும்பத்தின் இந்த விமர்சனம் பொருத்தமானதாக இருக்காது என அவர் குறிப்பிடுகிறார்.

2012அம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டிகள் எங்கு நடைபெறும் என்பது வரும் ஜுலை 6ஆம் திகதி தெரியும் என்றும் லண்டனில் நடத்துவதற்கு பெரும்பாலானவர்களின் ஆதரவு கிடைக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். அண்மையில் 70 முதல் 75 வீதமான வாக்குகள் இதற்கு ஆதரவாக கிடைத்திருப்பதால் மகாராணியும் இதன் பின்னணியாக இருக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவிக்கிறார்.

## அவுஸ். ஓபன் டென்னிஸ் போட்டி
## பெடரர், டேவன் போர்ட் முதல் நிலையில்





அடுத்த வாரம் தொடங்கவுள்ள அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ரோஜர் பெடரர் மற்றும் டேவன் போர்ட் ஆகியோர் தரப்பட்டியலில் முதல் நிலை வீரர் மற்றும் வீராங்கனைகளாக கணிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச டென்னிஸ் தரப்பட்டியலில் முதல் 20 இடங்களில் உள்ள ஆண்கள் அனைவரும் இப்போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

அதேபோன்று, பெண்கள் டென்னிஸ் தரப்பட்டியலில் முதல் 20 இடங்களில் 17 பேர் இப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

அவுஸ்திரேலிய ஓபன் நடப்பு சம்பியனான பெடரர் கடந்த வருடம் ஆண்கள் டென்னிஸ் அரங்கத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.

இவர், மூன்று கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் மற்றும் டென்னிஸ் மாஸ்டர்ஸ் கோப்பை உட்பட மொத்தம் 11 பட்டங்களைக் கைப்பற்றினார். கடந்த வருடம் இவரது வெற்றி தோல்வி சாதனை 746 என்பதாகும்.

இரண்டாம் நிலை வீரரும், அமெரிக்காவைச் சேர்ந்தவருமான ஆன்டிரொடிக் கடந்த வருடம் நான்கு ஒற்றையர் பட்டங்களை வென்றார். விம்பிள்டன் போட்டியில் ரன்னர்அப்பட்டத்தைப் பெற்றார்.

அவுஸ்திரேலிய வீரரான லெய்டன் ஹெவிட் மூன்றாம் நிலை வீரராக கணிக்கப்பட்டிருக்கிறார். இரண்டு முறை இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த ரஷ்ய வீரரான மாரட்சபின் 4ஆவது இடத்திலிருக்கிறார்.

4 முறை அவுஸ்திரேலிய ஓபன் சாம்பியனான ஆண்ட்ரே அகாசி 8ஆவது இடத்திலிருக்கிறார். 34 வயதான அமெரிக்கரான அகாசி, ஆண்கள் ஒற்றையர் போட்டியில் பங்கேற்கும் வயதான வீரர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

கூயாங்கிளாசிக் போட்டியில் பங்கேற்றபோது, அவரது இடுப்பு தசையில் பிடிப்பு ஏற்பட்டதால் அகாசி இப்போட்டியில் பற்கேற்பாரா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

## டாக்கா டெஸ்ட் கிரிக்கெட் போட்டி
## சிம்பாப்வே 244/6 விக்கெட்டை இழந்தது

பங்களாதேஷ் சிம்பாப்வே அணிகளுக்கிடையில் டாக்காவில் நேற்று ஆரம்பமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதலாம் நாளான நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது சிம்பாப்வே அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாட இணங்கியது.

இதன்படி துடுப்பாட்டத்தில் மக்சிக் கனேரி 51 ஓட்டங்களையும் மசகட்சா 43 ஓட்டங்களையும் சிக்கும்புறா 34 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்று ஆட்டமிழந்தனர்.

அணித் தலைவர் தைபு மிகவும் நிதானமாக 166 பந்து வீச்சுக்களை சந்தித்து 49 ஓட்டங்களைப் பெற்று ஆட்மிழக்காதுள்ளார்.

பந்து வீச்சில் இனாமுல் ஹக் 4 விக்கெட்டுக்களையும் பைசியா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். சிட்கொங்கில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 4ஆவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா
## எதிர்வரும் யூலை மாதத்திற்கு பிற்போடப்பட்டது



கி. பாப்பா

எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட துயரமான சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு 2005 பெப்ரவரி மாதம் நடைபெற இருந்த நான்காவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா எதிர்வரும் யூலை மாதம் இரண்டாம் வாரத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது. தமிழீழ தேசிய எழுச்சி நிகழ்வுகளில் ஒன்றாக அமையும் இந்தவிழாவின் சிறப்புக்காக ஒத்துழைக்கும் அனைவரையும் எமது மக்களின் துயரமான இந்த வேளையில் துயர் துடைப்பு நடவடிக்கைகளுக்காக ஆதரவுக்கரம் நீட்டும்படி தமிழீழ விளையாட்டு துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா அவர்கள் தெரிவித்துள்ளார்.

## இறுதி நேரத்தில் பயஸ் விலகினார்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் இருந்து இந்திய வீரர் பயஸ் விலகினார்.

இந்தியாவின் முன்னணி டென்னிஸ் ஆட்டக்காரர் லியாண்டர் பயஸ் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி தொடங்க இன்னும் சில நாட்களே எஞ்சியுள்ள நிலையில் லியாண்டர் பயஸ் காயம் அடைந்தார். இதனால் அவர் அவுஸ்திரேலிய ஓபன் போட்டியில் கலந்து கொள்ள முடியாத பரிதாபம் ஏற்பட்டுள்ளது.



## சிந்தனைக்கு

தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக் கொள்ளும் பொழுதுதான் ஒரு தேசம் தனக்கே உரித்தான-தனித்துவமான-ஆளுமையைப் பெறுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23ela @ yahoo .com

# இனவாதமின்றி வேறென்ன?

நிவாரணப்பணிகளுக்கான பொறுப்பை அதாவது நலன்புரி நிலையங்களில். உள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளை இராணுவத்தரப்பினரிடம் ஒப்படைக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்ட நடவடிக்கையானது நிச்சயமாகத் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையே.

நிவாரணப்பணிகளை இராணுவத்தினரின் கண்காணிப்பின் கீழ் அரசு கொண்டுவந்தனிமக்கான காரணம் இராணுவக்கட்டுப் பாட்டுப்பிரதேசங்களில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு உரிய வகையில் நிவாரணப்பொருட்கள் சென்றுசேரவில்லை என்றோ, நிவாரணப்பொருட்களில் மோசடி நடக்கின்றதோ என்பதினால் அல்ல.

நாட்டிலுள்ள நலன்புரி நிலையங்களை இராணுவத்தினர் பொறுப்பேற்றுள்ளதாகச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளபோதும், சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்பிற்குள்ளான தெற்கு, வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் குறிப்பாக கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் மட்டுமே இத்தகைய பொறுப்பேற்கும் நடவடிக்கை தீவிரமாகவுள்ளது.

இவ்வாறு இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில், தமிழர் நலன்புரி நிலையங்கள் மட்டுமே பொறுப்பேற்கப்பட்ட நிகழ்வும்- அங்கு பணி புரிந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் மிரட்டப்பட்டவற்றையும் கொண்டு சனாதிபதி சந்திரிகாவின் இவ் அறிவிப்பானது தமிழருக்கு எதிரானது என்றே சொல்வதற்குப் போதிய சான்றுகள் உண்டு.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள தமிழர் நலன்புரி நிலையங்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பராமரித்துவரினும் அங்கு அரசாங்கத்தின் நிவாரணப் பணிகளுக்கோ அன்றி ஏனைய நடவடிக்கைகளுக்கோ தடையெதுவும் விதிக்கப்படவில்லை. அதாவது அரசாங்கம் தனது பணிகளை முழு அளவில் மேற்கொள்ள எந்தவித இடையூறும் இருக்கவில்லை.

அடுத்ததாக சிறிலங்கா இராணுவத்தரப்பினால் கடந்த காலங்களில் பெரும் அனர்த்தங்களைச் சந்தித்த இலங்கைத் தமிழ்மக்கள் குறிப்பாக கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் இராணுவத்தினரின் கண்காணிப்பில் நலன்புரி நிலையங்களில் இருத்தலென்பது அகதி வாழ்விலும் பீதி கலந்ததொன்றாகவே இருக்கமுடியும்.

இத்தகையதொரு சூழ்நிலை நிலவுகையில் மீண்டும் இராணுவத்தினரை பயன்படுத்தச் சந்திரிகா குமாரதுங்க முற்பட்டுள்ளமைக்கு காரணம் இல்லாமல் இல்லை. அதாவது வடக்கு-கிழக்கில் குறிப்பாக கிழக்கில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், விடுதலைப்புலிகளின் நேர்த்தியான செயற்பாடுகள் அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கலாம். அதுமட்டுமல்ல அழுத்தத்தைக் கொடுப்பதாகவும் இருந்திருக்கலாம்.

அதாவது அரசிற்கு முந்தியதான அவர்களின் விரைவான மீட்புப்பணி நடவடிக்கைகள், அதைத் தொடர்ந்து நிவாரணப்பணி நடவடிக்கைகள் துரிதகெதியிலானவையாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டவையாகவும் இருந்தன. குறிப்பிடத்தக்க நிவாரணப் பொருட்களும், மருத்துவ உதவிகளும் அவர்களால் வழங்கப்பட்டன.

அதிலும் குறிப்பாக கிழக்கிற்கு வெளிநாடுகளில் இருந்து தமிழ் டாக்டர்கள் விஜயம் செய்தமையும், தொண்டர்கள் வந்து சேர்ந்தமையும் அரசாங்கத்திற்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கலாம். ஒரு புறம் அரசால் விரைவான நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலையும், மறுபுறத்தில் த.பு.கழகத்தின் செயற்பாடும் வேகமும் அரசாங்கத்திற்குச் சினத்தை ஊட்டியிருக்கலாம்.

இத்தகையதொரு நிலையில்தான், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நடவடிக்கையை முடக்க அரசாங்கம் முற்பட்டுள்ளது. இதன் மூலம் த.பு.கழகத்தின் நடவடிக்கையை முடக்குவது மட்டுமல்ல மறுபுறத்தில் தமிழ்மக்களுக்குரிய நிவாரணங்கள் உரிய முறையில் சென்றடைவதைத் தடை செய்தல் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

சிறிலங்கா அரசு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் நடவடிக்கைகளைத் தாமதித்தே ஆரம்பித்திருந்தது. அத்தோடு அதன் கவனமும் அக்கறையும் தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட பகுதிகள் மீதே இருந்தது. ஆனால் பின்னர் தவிர்க்க முடியாது வடக்கு-கிழக்கு நிலவரம் வெளிவந்த நிலையில் அங்கு தமிழ் மக்களுக்கான நிவாரணப் பணிகளுக்கு அரசாங்கம் முட்டுக்கட்டைபோட முனைகின்றது.

அரசாங்கத்தின் இச்செயலானது இனவாத நோக்கிலானது இல்லாது விடில் தமிழ் மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களை மட்டும் ஆயுதப்படையினர் பொறுப்பேற்க முற்படுவது ஏன்? தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர், விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் இந் நலன்புரி நிலையங்களுக்கு உதவுவதைத்தடுக்கவிளைவதேன்?

சனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசாங்கமும் இனமத பேதமின்றி நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்படும் எனக் கூறலாம. உதவி வழங்கும் நாடுகளும், அமைப்புக்களும் உதவிகள் உரியவர்களைச் சென்றடைகின்றதா? எனக் கண்காணிக்கப்படுவதாகக் கூறலாம். ஆனால் இவற்றால் தமிழ் மக்களுக்கு உரியவை கிடைத்துவிடும் என எதிர்பார்த்திருப்பின் ஏமாற்றமே மிஞ்சும். ஏனெனில் வடக்கு-கிழக்கிற்கு எனக் கணக்குக்காட்டப்படுபவை இடை நடுவில் மாயமாக மறைந்தே போய்விடலாம். அரசாங்கம் இதற்குக் கணக்குக்காட்ட வேண்டிய தேவையும் இருக்கமாட்டாது.

# தேசிய அரசு அமைக்க முயன்றால் அதனை முற்றாக எதிர்ப்போம்

-ஜே. வி. பி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ள இத்தருணத்தை பயன்படுத்தி தேசிய மட்டத்தில் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இது வரை அரசாங்கத்திற்கு முடியாமல் இருப்பதாக கிராமிய சிறு கைத் தொழில் அமைச்சர் லால் காந்தா தெரிவித்துள்ளார்.

இத்தருணத்தில் நாட்டை கட்டி எழுப்புவதற்கு இன,மத குல பேதமின்றி ஒன்றிணையுமாறு கேட்டுக் கொள்வதுடன் சுனாமியை பயன்படுத்தி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு அரசு முற்பட்டால் அதை முற்றாக எதிர்ப்போம் என லால்காந்தா தெரிவித்துள்ளார்.

# உலக உணவுத் திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் சுனாமி அனர்த்தப் பகுதிகளை பார்வையிட வருகை

உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜேம்ஸ்மொரிஸ் இன்று இலங்கை வருகை தருகிறார். ஒரு நாள் தங்கியிருக்கும் இவர் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுகிறார்.

தமது பணிகளின் மதிப்பீடு தொடர்பாகவே, ஜேம்ஸ் மொரிஸின பயணம் அமைவுள்ளது. உலக உணவுத் திட்டம் தற்போது கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கள அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக அம்பாறை, காலி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் தமது அலுவலகங்களை உலக உணவுத் திட்டம் அமைக்கவுள்ளது.

# கொழும்பில் இரு வேறு சம்பவங்களில் உகண்டா நாட்டவர் உட்பட ஐவர் பலி

கொழும்பு மட்டக்குளிப் பகுதியில் நேற்றுப் பாதாள உலக உறுப்பினர்கள் மூவர் பொலிசாருடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து ரி.56ரக துப்பாக்கிகள் இரண்டும், 27 தோட்டாக்களைக் கொண்ட மகசின் இரண்டும், இரண்டு கைக்குண்டுகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாத்தறை, காலி, தங்காலை பகுதிகளில் இடம்பெற்ற பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட "பிரியங்கரகுலசேகர, நிலந்தசச்சித ஆகியோரும் இதன்போது உயிரிழந்துள்ளதாக கொழும்பு குற்றவியல் தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

கோமகம பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரிடம் பெறப்பட்ட தகவலுக்கமைய மட்டக்குளிக்குச் சென்ற பொலிசாரை அங்கிருந்த 5 பேரைக் கொண்ட குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவத்தின் போது சந்தேக நபர்கள் இருவரும் மேலும் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை அளுத்கம பேருந்து நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பேருந்து ஒன்றினுள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பேருந்தின் சாரதியும் அவரின் நண்பரான உகண்டா நாட்டவர் ஒருவரும் இச்சம்பவத்தில் பலியாகியுள்ளனர். இவர்கள் தூங்கிக்கொண்டிருந்த வேளையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். பேருந்தின் சாரதி கதிர்காமத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. (32)

# அம்பாறைப் பகுதியை நோக்கி அமெரிக்கக் கடற்படைக் கப்பல்

கிழக்கு கடற்கரையோரப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவென யு.எஸ்.எஸ் டுலுத் எனும் கடலிலும், தரையிலும் தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடிய அமெரிக்க கடற்படைக் ப்பல் ஒன்று கிழக்கு மாகாணம் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என பொஸ்ரன் குளோப் என்கின்ற அமெரிக்க பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது பற்றிய மேலதிக விபரம் வருமாறு; அம்பாறையில் இன்று 30 தொன் நிவாரணப் பொருட்களை ஆகாய மார்க்கமாக விநியோகிப்பதே, 800 கடற்படையினருடன் செல்லும் இந்தப் போர்க்கப்பலின் நோக்கம் என அதனது கொமாண்டர் லாரி கிறிப்பின் தெரிவித்துள்ளார். மூன்று உலங்கு வானூர்திகளை பயன்படுத்தி விநியோகங்களை மேற்கொள்ளப்பட இருப்பதாகவும், பல வீதிகள் சேதமடைந்திருப்பதால் தங்களிடம் அப் பகுதிக்கான விநியோகத்தினை மேற்கொள்ள போதியளவு வசதிகள் இல்லாதிருப்பதன் காரணமாக சிறிலங்கா அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே அமெரிக்கா இத் திட்டத்தினை நிறைவேற்ற முன்வந்துள்ள்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆகாய மார்க்க நிவாரண விநியோகம் எதிர்வரும் ஞாயிறு அன்று முற்றுப்பெறும் எனவும், அதன் பின்பு இக் கப்பல் தனது முன்னைய தரிப்பிடமான தெற்கு கரையோரத்தில் அமைந்துள்ள ஹக்கெல எனும் இடத்திற்கு செல்லும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

- மின்சார உற்பத்தி மையங்களிலுள்ள -

# புவியதிர்வு மானிகளை நிதி இன்மையால் திருத்தவில்லை

மின்சார உற்பத்தி மையங்களில் பொருத்தப்பட்டுள்ள சிறிய புவியதிர்வு மானிகள் கடந்த 10 வருடங்களாக செயலின்றி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விக்டேரியா மற்றும் கொத்மலை ஆகிய மின்சார உற்பத்தி மையங்களில் பொருத்தப்பட்டிருந்த சிறிய புவியதிர்வு மானிகளை திருத்துவதற்கு உரிய நிதியில்லாமையினால் அவை தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை எனக் குறிப்பிட்ட மின்சார உற்பத்தி மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பிட்ட புவியதிர்வு மானியின் மூலம் மலைநாட்டு பகுதிகளில் ஏற்படும் புவியதிர்வுகளை உணர முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நேற்று மாத்தளை உக்குவளையில் அமைந்துள்ள கிணறு ஒன்றின் மட்டம் அசாதாரண நிலையில் 20 அடி வரை உயர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை திடீரென உயர்ந்த நீரில் சுமார் 7 அங்குலம் அளவிற்கு நுரை தென்பட்டதாகவும் உக்குவளை பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பேரதனை பல்கலைகழக புவியியல் துறை விரிவுரையாளர் எச். ஏ தர்மகுணவர்தன கருத்துரைக்கையில் சுனாமி பேரலைகளின் பின்னர் இவ்வாறான நீர்மட்டம் உயரும் தன்மை மலைநாட்டில் ஏற்படுவதாக தெரிவித்தார். (32)

-சுனாமியால் பாதிக்கப்பட்ட-

# வங்கியொன்றின் பணப்பெட்டியை மீட்டு புதைக்க முயன்றோர் கைது


காலியில் மீட்பு நடவடிக்கையின் போது இடிபாடுகளுக்குள் காணப்பட்ட வங்கியொன்றின் பணப்பெட்டியை குழி தோண்டிப் புதைக்க முயன்ற மண் அகழும் இயந்திரச் சாரதியும் அவரது உதவியாளரும் கைது செய்யப்பட்டனர். ஹிக்குடுவ நகரசபையின் பெக்கோ இயந்திர மூலம் அப் பகுதியில் மீட்புப் நடவடிக்கை இடம்பெற்ற போது தேசிய அபிவிருத்தி வங்கியின் பணப்பெட்டி கண்டெடுக்கப்பட்டது.

இதனை இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு எடுத்துச் சென்று குழி தோண்டிப் புதைக்க முயன்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மண் அகழும் இயந்திரச் சாரதியும் உதவியாளரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

## முல்லை, வடமராட்சி கிழக்கில்

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக இருப்பிடமமைத்தல் துரிதம்

'சுனாமி' கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை நலன்புரி நிலையங்களில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை



அந்தந்தப் பகுதிகளில் மக்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள செயலணிக்குழு செயலங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்படி முல்லை.மாவட்டத்தில் பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை தற்காலிகமாக குடிமர்த்த விசேட முகாம்கள் அமைக்கப்பட்டுவருகிறது. முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரியில் செயற்பட்டுவரும் செயலணிக்குழு செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டும் இந்த வேலைத் திட்டம் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் விரைவில் அந்த முகாம்களில் மக்களைக் குடியமர்த்த வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தாம் மேற்கொள்வதாகவும், செயலணிக் குழுவினர் தெரிவித்தனர்.

இதேவேளை வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் கடல் அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களை தற்காலிக கொட்டகைகளில் குடியமர்த்துவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதற்கான காணிகள் தெரிவு செய்யப்பட்டு துப்புரவுப் பணிகள் நிறைவடைந்து தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்படுகின்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகி இருப்பதாக புதுக்காட்டுச் சந்தி செயலணிக்குழு செயலகம் அறிவித்துள்ளது. (லோ.தீ)

# இரு உந்துருளிகள் மோதியதில் இளைஞர் படுகாயம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கட்சன் வீதிப்பகுதியில் இரு உந்துருளிகள் நேற்று



முன்தினம் மாலை 3.30 மணியளவில் நேருக்கு நேரே மோதிக் கொண்டது.

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் இருந்து கட்சன் வீதி நோக்கி வந்து கொண்டிருந்த உந்துருளியும் கிளிநொச்சிப் பகுதியில் இருந்து வட்டக்கச்சி சந்தையடிப் பகுதி நோக்கி வந்து கொண்டிருந்த உந்துருளியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் கண்ணதாசன் (வயது - 23) என்பவர் படுகாயம அடைந்து வட்டக்கச்சி பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதும் இரு ஈருருளிகளும் பலத்த சேதத்துக்குள்ளாகின. இவ்வீதி பலத்த சேதத்துக் குள்ளாகி இருந்ததனாலேயே இந்த வீதி விபத்து ஏற்பட்டுள்ளது. (12)

# அரசாங்கம் பொய் கூறுவதை விடுத்து உண்மைகளைக் கூற முன் வரவேண்டும்

## — ஐ.தே.க.பா.உ.ரவி கருணாநாயக்க —

அரசாங்கம் இனிவரும் காலங்களிலும் மக்களுக்கு பொய் கூறுவதை விடுத்து உண்மை கூற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். அரசாங்கம் 43 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்குவதாக கூறி குறைவானவர்களுக்கே நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன. பலரும் அவர்களின் பட்டங்களுக்கு ஏற்ப அல்லாமல் மாற்றுத் துறைகளில் நியமனம் பெற்றுள்ளனர்.

இவை யாவற்றையும் மறைத்து சுனாமியை முன்னிலைப்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருகிறது இதனை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக கண்டிக்கிறது எனவே அரசாங்கம் தொடர்ந்தும் பொய் வாக்குறுதிகளை வழங்காமல் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்காக கிடைத்த நிவாரணங்களையும் நிதியுதவிகளையும் அவர்களுக்கே ஒதுக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (32)

# ஒரு குழந்தையை உரிமை கோரும் ஒன்பது தாய்மார்

சுனாமி அனர்த்தத்தின் போது கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தை ஒன்றை ஒன்பது பெண்கள் தமது குழந்தை என உரிமை கோருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் கூறுகின்றன.

சுனாமி அனர்த்தத்தில் 26ஆம் திகதி கல்முனை வைத்தியசாலைக்குச் சக்தியற்ற நிலையிலும், சேறு பூசப்பட்ட நிலையிலும், குழந்தை ஒன்று 81ஆவது நோயாளியாக அனுமதிக்கப்பட்டது. அக் குழந்தை தனியாகவே உள்ளது. தமது குழந்தைகளைத் தேடும் பெற்றோர் ஒவ்வொரு நாளும் வைத்தியசாலைக்கு வந்து குழந்தையைப் பார்வையிடுகின்றனர். இவர்களில் ஒன்பது தாய்மார் அக் குழந்தை தமது எனக் கூறுகின்றனர். குழந்தையின் உண்மைப் பெயர் தெரியாது எனவே " குழந்தை 81" என அழைக்கின்றோம். இவ் ஒன்பது பெண்களும் தமக்குள்ளே விவாதிக்கின்றனர் என கல்முனை வைத்திய அதிகாரி டாக்டர். கே.ஆர். சசீந்திரன் தெரிவிக்கின்றார். வைத்தியசாலை அதிகாரிகள் பொலிசாரை விசாரணைக்காகவும் மரபணுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் கேட்டுள்ளனர். இது தற்பொழுது நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். நீதிமன்று மரபணுப் பரிசோதனையை மேற்கொள்ளவென ஏமைக் கேட்டால் நாம் அதைச் செய்வோம். ஆனால் இப் பரிசோதனைக்கு பெருந்தொகையான பணச் செலவு ஏற்படுவதுடன் அச் செலவை யார் செலுத்துவது என்று தெளிவில்லை எனவும் டாக்டர் சசீந்திரன் கூறினார்.

## இரு...

பிரேதஅறையில் ஒப்படைக்கப் பட்டிருநதது. யாழ்போதனாவைத்தியசாலைக்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் சடலங்களை அவர்களது சொந்த இடங்களிற்கு எடுத்துச்செல்ல அனுமதித்ததுடன் சடலங்களை முன்னதாக கொழும்பு மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையினில் கையளித்து பிரேத பரிசோதனை அறிக்கையினைப் பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கவும் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். இதேவேளை வேலணைப் பகுதியில் உயிரிழந்த கடற்படைச் சிப்பாயின் சடலத்தில் கூரிய ஆயுதம் துளைத்த அடையாளங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (27)

## தாழ்...

வரையான பகுதிகள் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவே இந்த பகுதிகளின் கடற்றொழிலாளர்களை விழிப்பாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (32)

## த.பு.க...

பகுதிகளில் நடந்த கோரமான பாதிப்புக்களைப் பார்வையிட்ட ஜிம் கரிஜியானிஸ், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகள் முன்னெடுப்புக்கள் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் விரிவாகக் கேட்டறிந்து கொண்டார். பாதுகாப்பான வீடுகளைக் கட்டுதல், கடும் அலைகளிலிருந்து உயிர்களைப் பாதுகாக்கத்தக்க உறுதியான மதில்களை அமைத்தல், சரியான நிவாரண உதவிகளை வழங்குதல், சீரான சமூகநல உதவிகள், கல்வி மற்றும் பொருளாதாரத்தைச் சீர் செய்தல் போன்ற பல வாய்ப்புக்கள் குறித்தும் இப்பேச்சுக்களின் போது ஆராயப்பட்டுள்ளது.

கனேடிய அரசின் உதவிகளையும், கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பாராட்டத்தக்க தாராளமனபான்மையுடனான உதவிகளையும் தாம் பெரிதும் நன்றியுடன் மதிப்பதாக றெஜி அவர்கள், பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்து, கனேடிய மக்களுக்கும் தனது நன்றிகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார். கனடாவில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளை தொடர்ந்து பல ஆண்டுகளாக சமூகசேவை அமைப்பாக அங்கீகரிக்கப்படும் விடயத்தில் புறக்கணிக்கப்பட்டு வருவதாக கனேடிய பாராளுமன்ற உறுப்பினரிடம் றெஜி கவலை வெளியிட்டார்.

## அம்பாறை...

இதேபோன்று அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்புப் பிரதேசத்தில் முன்னூற்றி எண்பத்தி மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை ஐயாயிரத்தி இருநூற்றி இருபத்தைந்து குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இருப்தோராயிரத்து அறுநூறு பேர் அகதிகளாகியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேசத்தில் ஆயிரத்தி நாநூற்றி எழுபத்தொருபேர் உயிரிழந்துள்ளதோடு மூவாயிரத்து எழுநூற்று முப்பத்தொரு குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகி உள்ளன. பதினாறாயிரத்து முன்னூற்றி அறுபத்தொரு பேர் அகதிகளாகியுள்ளனர்.

இதேபோன்று காரை தீவுப் பிரதேசத்தில் எண்நூற்றி இருப்பத்தி நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். இரண்டாயிரத்தி நாற்பத்தைந்து குடும்பங்களைச் சேர்ந்த ஏழாயிரத்து நாநூற்றி எழுபத்தொரு பேர் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.

கல்முனைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தமிழ்ப்பிரிவில் ஆயிரத்தி முந்நூற்றி அறுபத்தைந்து பேர் உயிரிழந்துள்ளனர். மூவாயிரத்தி இருநூற்றி எட்டு குடும்பங்களைச் சேர்ந்த பன்னிரெண்டாயிரத்தி ஐநூற்றி எண்பத்தொரு பேர் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.

இதேவேளை கல்முனை பிரதேச சபைக்குட்பட்ட முஸ்லிம் பிரிவில் மூவாயிரத்தி அறுநூற்றி முப்பத்தாறு பேர் உயிரிழந்துள்ளனர். ஏழாயிரத்தி எழுபத்தாறு குடும்பங்களைச் சேர்ந்த இருபத்தி நாலாயிரத்து தொழாயிரத்தி தொன்னூற்றாறு பேர் பாதிப்புக்குள்ளாகி இடம் பெயர்ந்துள்ளன.

நிந்தவூர் பிரதேசசெயலகத்தில் நூற்றி இருபத்தெட்டுப்பேர் உயிரிழந்துள்ளனர். இருநூற்றி அறுபது குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்தி பதினான்கு பேர் பாதிப்புக்குள்ளாகி அகதிகளாகியுள்ளனர்.

சம்மாந்துறை, இறக்காமம் நாவிதன் வெளிப்பிரதேசங்களில் சுனாமி கடல் அனர்த்தம் நிகழாத போதிலும் இப்பிரதேசத்தில் இருந்து வேலை காரணமாகச் சென்ற 19பேர் உயிரிழந்துள்ளனர்.

நாவிதன் வெளிப்பிரதேசத்தில் பத்தொன்பது பேரும், சம்மாந்துறைப் பிரதேசத்தில் இரண்டு பேரும் இறக்காமம் பிரதேசத்தில் இரண்டு பேரும் உயிரிழந்துள்ளனர்.

## காங்கேசன்...

என்பதைத் தாம் அறிவித்திருக்கவில்லையெனவும் அவர்கள் கூறுகின்றனர். ஆயினும் இவ் இறங்குதுறைகளை உடனடியாக புனரமைத்து, தமது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதில் யாழ்.மாவட்ட படைத்தலைமை கூடிய கவனமெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

## யாழ்...

இந்நிலையில் அண்மைய சுனாமி கடற்கொந்தளிப்பின் போது இத்தளங்கள் கடல் நீரால் மூழ்கடிக்கப்பட்டதுடன், முற்றாக அழிவுற்றுமிருந்தது. அங்கு தங்கியிருந்த படையினர் பலரும் உயிரிழந்திருந்ததுடன், பெருமளவிலானோர் காயமடைந்துமிருந்தனர்.

அவ்வேளையில் இறந்த மற்றும் காயமடைந்த படையினர் மட்டுமே மீட்கப்பட்டிருந்த போதும் ஆயுததளபாடங்கள் மீட்கப்பட்டிருக்கவில்லை. எனினும் தற்போது அப்பகுதிகளில் மக்கள் செல்ல தடை செய்யப்பட்டு நூற்றுக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் வேட்டை இடம் பெற்று வருகின்றது.

பெரும்பாலும் கடல்நீர் இத்தளப் பகுதியெங்கும் தேங்கியுள்ள நிலையில், படையினர் கூரிய ஆயுதங்களைக் கொண்டு நீர்ப்பகுதியினுள் தேடுதல் மேற்கொண்டு வருவதைக் காணக்கூடியதாக இருந்தது.

## கனேடிய...

கேள்விக்கு பதிலளிக்கையில் கனேடிய அரசு நேரடியாக தமிழர் தாயகத்திற்கு உதவிகள் வழங்க முன்வந்துள்ளதா?

கனேடிய உதவிகள் அதாவது பணமாக இருந்தாலும் சரி அல்லது பொருட்களாக இருந்தாலும் சரி எந்தவொரு அரசாங்கத்திடமும் நேரடியாக கொடுக்கப்படமாட்டாது.

இவையாவும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், கனேடிய நிறுவனங்கள் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும். கனேடிய அரசாங்கமும், கனேடிய மக்களும் கொடுக்கப்படும் பொருட்கள் பாதிக்கப்படும் மக்களுக்கு சமமாக கொடுக்கப்பட வேண்டும் என்பதை அவதானமாகப் பார்த்துக் கொண்டவண்ணம் இருப்பார்கள். அதாவது கனேடிய அரசாங்கம் இலங்கைக்கு வந்துள்ளதாவது 30 செக்கன் கமராவுக்காகவோ அல்லது 30 செக்கன் செய்திக்காகவோ அல்ல தூர நோக்கு பயன்பாடாக தமிழ்மக்களுக்கு உதவி செய்வதற்காகவே யாகும்.

வருகிற திங்கள் அன்று கனேடிய பிரதமர் இலங்கைக்கு வருகை தரும் பொழுது அவருடன் நேரடியாகச் சந்தித்து இன்று அரசியல் துறைப் பொறுப்பாளர் அவர்களுடன் கலந்துரையாடியவைகளையும், கடந்த சில தினங்களாக தான் பார்வையிட்ட இடங்களையும், சம்பவங்களையும் கனேடிய பிரதமருக்கு எடுத்துக்கூறவுள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன், கனேடியப் பிரதமர் வடகிழக்கு மாகாணங்களுக்கும் நேரில் விஜயம் மேற்கொள்வாரா? என செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு அதற்கான எது வித பதிலையும் தெரிவிக்காததுடன் தான் வடக்கு பகுதிக்கு வந்து நேரில் பார்வையிட்டவைகளை கனேடிய பிரதமருக்கு எடுத்துக்கூறவுள்ளேன் எனத் தெரிவித்தார். நேற்று நண்பகல் 11.45 மணிக்கு கிளிநொச்சி விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் மேற்படி சந்திப்பு இடம் பெற்றது. விடுதலைப் புலிகளின் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும், கனேடிய அரச தரப்பில் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஜிம் அரியேனசும் குழுவினரும் கலந்து கொண்டனர். மேற்படி சந்திப்பு பிற்பகல் 1.45 மணிவரை இடம் பெற்றது. பின்னர் இவர் முல்லைத் தீவுக்கும் சென்று பார்வையிட்டார். (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது